# சைவநீதி

SAIVANEETHI

Feb - Mar. 2001 விக்கிரம மாசி



## சைவசமய உயர் தகமைத் தேர்வுப் போட்டி

சைவ சமய அறிவை விரிவடையச் செய்யும் வண்ணம் சமய அறிவுப் போட்டி ஒன்றினை எதிர்வரும் சித்திரை மாதம் நடாத்த உள்ளோம்.

★ இதில் எவரும் பங்கு பற்றலாம் வயதுக் கட்டுப்பாடு இல்லை.

★ நூறு நிமிடத்தில் நூறு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

★ வினாக்கள் சித்தாந்த சாத்திரங்கள், திருமுறைகள், புராணங்கள்,விக்கிரம வருட சைவநீதி ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும்.

★ யாழ்ப்பாணம், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு கொட்டகலை, மத்தளை ஆகிய இடங்களில் சமகாலத்தில் தேர்வு நடைபெறும். மேலே குறிப்பிடப்படாத இடங்களில் ஐம்பதிற்கு மேற்பட்டோர் விண்ணப்பித்தால் அவ்விடத்தில் தேர்வு நடத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | **தங்கப் பதக்கம்** |
| இரண்டாம் பரிசு | :- | **வெள்ளி பதக்கம்** |
| மூன்றாம் பரிசு | :- | **வெண்கலப் பதக்கம்** |

★ ஐந்து ஆறுதற் பரிசும் ஐம்பது புள்ளிகளுக்கு மேற் பெறுவோருக்குச் சான்றிதழும் வழங்கப்படும்

★ கீழே காணப்படும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமையத் தாமே விண்ணப்பப் படிவத்தை 29 செ.மீ × 21செ.மீ அளவான காகிதத்தில் வடிவமைத்து 20.03.2001 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும்.

★ விண்ணப்பத்துடன் சுயமுகவரி எழுதி ரூ. 3.50 முத்திரை ஒட்டிய ஒரு கடித உறையும், "சைவநீதி" என்ற பெயருக்கு மணிமலர் முகவர் தபாலகம் கொழும்பு -13, தபாற்கந்தோரில் மாற்றக்கூடியதாக ரூபா. 25க்கு பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையும் அனுப்பவேண்டும்.

★ விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :-


EDITOR (ADMINISTRATION)
C/O. S.SATHASIVAM, Esqr
3B, 46th LANE
COLOMBO 06
T/P:- 507325


நிர்வாக ஆசிரியர்
சைவநீதி

## சைவசமய உயர் தகமைத் தேர்வுப் போட்டி விண்ணப்பம்

பெயர் :- ..............................................................

முகவரி :- ..............................................................
..............................................................
..............................................................
..............................................................

தேர்வுக்கு தோற்ற விரும்பும் இடம்:- ..............................................

தொழில் :- ..............................................................

பிறந்த திகதி :-..............................................................

.............................. ..............................
திகதி கையொப்பம்

உ

சிவமயம்

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

# சைவநீதி

மலர் 4 விக்கிரம மாசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாதஇதழ் - 11

## தேடிக் கண்டு கொண்டேன்

இறைவன் எங்கும் நிறைந்தவன். அவன் இல்லாத இடமே இல்லை என்பது நாம் அறிந்த தொன்று. எங்கும் நிறைந்த இறைவனைச் " செங்கணானும் பிரமனுந் தம்முளே எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர் " என்றார் அப்பரடிகள். திருமாலும் பிரமனும் தம்முள்ளே அகத்திலும் இறைவனைக் காணமுடியவில்லை. வெளியே எங்குந்தேடிப் புறத்தேயும் இறைவனைக் காணமுடியவில்லை. இதற்குக் காரணம் என்ன?

"கல்லா நெஞ்சில் நில்லா ஈசன்" என்பது சம்பந்தப் பெருமான் வாக்கு. எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் கல்லாதவர் மனத்தில் வெளிப்படாது ஒளித்திருப்பான். இறைவனைப் பற்றி எண்ணாது அவன் பெருமையை ஆராய்ந்து அறியாதவர் மனத்தில் இறைவன் வெளிப்பட மாட்டான். "ஓராதர் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியானே" என்பது சிவபுராணம். "கல்லா நெஞ்சம்" என்னும் போது கற்றல் எப்படி அமையும் ? இறைவன் புகழ் பேசுதல், வாயார அவனைப் பாடுதல், அவன் பெருமையைக் கேட்டல், அவன் நாமத்தைச் செபித்தல் போன்றன இறைவனைக் கற்றற்குரிய இலகுவழியாம்.

"பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர் ஐயனைக் காணலுற்றார் அங்கு இருவர்" என்பார் அப்பரடிகள். வேண்டாத எண்ணங்களை விலக்கி எம் மனத்தில் இறைவனை இருத்தினால், இறைவனுடன் தொடர்பில்லாத எவையும் எமக்கு வேண்டாதவையே. இறைவன் தொடர்பு யாருக்கு இருக்கிறதோ அவர்தாம் எமக்கு உறவினர், அவர் தாம் எமக்கு நண்பர். எனது வாழ்க்கைக்கு ஈறு வந்தாலும் நின் அடியாரோடன்றிப் பிறரோடு நட்புக் கொள்ளமாட்டேன். "நள்ளேன் நினதடி யா ரோடல்லால்" என்பார் மணிவாசகர். இறைவன் நாமத்தைச் சொல்லாதவர் எமக்குத் தொடர்பு அல்லாதவர் என்பார் சம்பந்தப் பெருமான்.

" கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்
சொல்லா தாரோ டல்லோம் நாமே. "

பொய்,வஞ்சனை அழுக்காறு இவற்றை அகற்றி மனதைத் தூய்மைப் படுத்தினால் எம்முள்ளே இறைவனைக் காணலாம்.

" தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுள்ளே
தேடித் கண்டு கொண்டேன். "

உ
சிவமயம்

# சைவநீதி

## உள்ளே...

1. தேடிக் கண்டு கொண்டேன் ............ 01
2. நின்ற திருத்தாண்டவம் ............ 03
- திருநாவுக்கரசு சுவாமிகள்
3. கந்தபுராணத்தில் சிவராத்திரி மகாத்மியம் ............ 04
- பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
4. வாழத் தகுதியுடையவன் யார் ? ............ 06
- சுவாமி விவேகானந்தர்
5. ஸ்நானம் ............ 08
6. சிவராத்திரி ............ 09
- திருமுருக கிருபானந்தவாரியார்
7. சொற்பதம் கடந்த தொல்லோன் ............ 11
- சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம்
8. நந்திக் கொடி ............ 14
- மணிப்புலவர்
9. *சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர்*
உண்மை விளக்கம் ............ 18
- மெய்கண்டார் அடியவன்
10. மூவர் செய்பனுவல் ............ 21
- முருகவே பரமநாதன்
11. திருவாசகத்தில் ஓர் ஆற்றுப்படை ............ 23
- மட்டுவில் ஆ.நடராசா
12. சைவநெறிப் பாடமும் பயிற்சியும் ............ 27
- சாந்தையூரான்

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

# நின்ற திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
யியமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் மாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையா யின்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிக ணின்ற வாறே. 1

மண்ணாகி விண்ணாகி மலையு மாகி
வயிரமுமாய் மாணிக்கந் தானே யாகிக்
கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியு மாகிக்
கலையாகிக் கலைஞானந் தானே யாகிப்
பெண்ணாகிப் பெண்ணுக்கோ ராணு மாகிப்
பிரளயத்துக் கப்பாலோ ரண்ட மாகி
எண்ணாகி யெண்ணுக்கோ ரெழுத்து மாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 2

கல்லாகிக் களறாகிக் கானு மாகிக்
காவிரியாய்க் காலாறாய்க் கழியு மாகிப்
புல்லாகிப் புதலாகிப் பூடு மாகிப்
புரமாகிப் புரமூன்றுங் கெடுத்தா னாகிச்
சொல்லாகிச் சொல்லுக்கோர் பொருளுமாகிச்
சுலாவாகிச் சுலாவுக்கோர் சூழ லாகி
நெல்லாகி நிலனாகி நீரு மாகி
நெடுஞ் சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே. 3

காற்றாகிக் கார்முகிலாய்க் காலம் மூன்றாய்க்
கனவாகி நனவாகி கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமா னுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றனா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 4

தீயாகி நீராகித் திண்மை யாகித்
திசையாகி அத்திசைக்கோர் தெய்வ மாகித்
தாயாகித் தந்தையாய்ச் சார்வு மாகித்
தாரகையு ஞாயிறுந் தண்மதியு மாகிக்
காயாகிப் பழமாகிப் பழத்தி னின்ற
விரதங்கள் ணுகர்வானுந் தானே யாகி
நீயாகி நானாகி நேர்மை யாகி
நெடுஞ்சுடராய் நிமிர்ந்தடிக ணின்ற வாறே. 5

அங்கமா யாதியாய் வேத மாகி
யருமறையோ டைம்பூதந் தானே யாகிப்
பங்கமாய்ப் பலசொல்லுந் தானே யாகி
பான் மதியோ டாதியாய்ப் பான்மை யாகிக்
கங்கையாய்க் காவிரியாய்க் கன்னி யாகிக்
கடலாகி மலையாகிக் கழியு மாகி
எங்குமா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 6

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலு மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மென நினைந்தார்க் கெளிதே யாகி
யழல்வண்ண வண்ணர்தா ணின்ற வாறே. 7

ஆவாகி யாவினில் லைந்து மாகி
யறிவாகி யழலாகி யவியு மாகி
நாவாகி நாவுக்கோ ருரையு மாகி
நாதனாய் வேதத்தி னுள்ளோ னாகிப்
பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளரல் வாசமாய் நின்றா னாகித்
தேவாகித் தேவர் முதலு மாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிக ணின்ற வாறே. 8

நீராகி நீளகலந் தானே யாகி
நிழலாகி நீள்விசும்பி னுச்சி யாகிப்
பேராகிப் பேருக்கோர் பெருமை யாகிப்
பெருமதில்க மூன்றினையு மெய்தா னாகி
ஆரேனுந் தன்னடைந்தார் தம்மை யெல்லாம்
மாட்கொள்ள வல்லவெம் மீச னார்தாம்
பாராகிப் பண்ணாகி பாட லாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிக ணின்ற வாறே. 9

மாலாகி நான்முகனாய் மாபூ தமாய்
மருக்கமா யருக்கமாய் மகிழ்வு மாகிப்
பாலாகி யெண்டிசைக்கு மெல்லை யாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானே யாகிப்
பூலோக புவலோக சுவலோ கமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் தானே யாகி
ஏலா தனவெல்லா மேல்விப் பானாய்
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே. 10

திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணத்தில் சிவராத்திரி மகாத்மியம்

– பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை

"ஆதியுமந்தமுமில்லா அரும்பெருஞ்சோதி" இறைவன். இறைவனின் அடியும் முடியும் காண முயல்வது வீண் செயல்.

சம்பந்தக் குழந்தை அடிமுடிகளின் காண்டற் கருமையைப் பதிகந்தோறும் ஒன்பதாம் பாடலில் வலியுறுத்தியருளியிருக்கின்றது.

அடிமுடி தேடிய பிரம விஷ்ணுக்கள் பற்றிப் பதிகத்தின் ஒன்பதாம் பாடல் தோறும் வருவது சிந்திக்கத் தக்கது.

**பூவு ளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந் தெழுந்தோடி**
**மேவி நாடிநின் னடியினை காண்கிலா வித்தக மென்னாகும்**
**மாவும் பூகமுங் கதலியு நெருங்குமா தோட்டநன் னகர்மன்னித்**
**தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத் திருந்தவெம் பெருமானே.**

என்பது சம்பந்தக் குழந்தை அருளிய திருக் கேதீசுவரத் தேவாரத் திருப்பதிகத்தின் ஒன்பதாவது பாடல்.

பிரமதேவர் தாமும் விஷ்ணு மூர்த்தியும் அடிமுடி தேடியதைப் புதல்வனாகிய தக்கனுக்கு உபதேசித்தது, கந்தபுராணத்தில் வரும் அடிமுடி தேடு படலம். பின்வரும் செய்யுள்கள் அப் படலத்திற் குறிப்பிடத் தக்கவை.

**கீண்டுநிலன் இருவிசும்பிற் கிளர்ந்துமடி முடியுணரேம்**
**மீண்டுமவன் றன்னருளான் மிடல்பெற்று வந்தனமால்**
**ஈண்டுசிவன் றனைவழிபட் டிருவருமன் னவன்றோற்றங்**
**காண்டுமென யானுரைப்பக் கண்ணனுமங் கதற்கிசைந்தான்**
(85)

**இருவருமச் சிவனுருவை யியன்முறையாற் றாபித்து**
**விரை மலர்மஞ் சனஞ்சாந்தம் விளக்கழலா தியவமைத்துப்**
**பொருவருபூ சனைபுரிந்து போற்றிசெய்து வணங்குதலும்**
**எரிகெழுசோ திக்கனிதா வெந்தையண் வந்தனனே**
(86)

**மைக்களமும் மான்மழுவும் வரதமுடன் அபயமுறும்**
**மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணுஞ்**
**செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்**
**முக்கணிறை யாங்காண முன்னின்றே அருள்புரிந்தான்.**

**அரியும் யானும்முன் தேடுமவ் வனற்கிரி யனல**
**கிரியெ னும்படி நின்றதா லவ்வொளி கிளர்ந்த**
**இரவ தேசிவ ராத்திரி யாயினு திறைவற்**
**பரவி உயர்ந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும்.**

அரியும் யானும் முன் தேடும் அ அனல்கிரி – திருமாலும் யானும் முன்னர் அடியும் முடியுந் தேடாநின்ற அந்த அக்கினி மலையானது – அனல கிரி எனும்படி நின்றது – அருணாசலம் என்று புகழ்ந்து கூறும்படி விளங்கியது – அ ஒளி கிளர்ந்த அது இரவே சிவராத்திரி ஆயினது – அந்தச் சோதி வடிவம் எழுந்தருளிய அந்த இரவுதானே சிவராத்திரி என்கின்ற புண்ணிய காலம் ஆயிற்று – அன்னது ஓர் வைகலிற் பலரும் இறைவற் பரவி உயர்ந்தனர் – அத்தகைய ஒப்பற்ற மகா சிவராத்திரியில் உலகத்தோர் பலரும் சிவலிங்கப் பெருமானை விதிப்படி பூசித்து வீடு பெற்றனர்.

**"அவளால் வந்த ஆக்கம் இல்வாழ்க்கையெல்லாம்"**
**"எத்திறம் ஈசன் நிற்பன் அத்திறம் அவளும் நிற்பள்."**

என்ற தொடர்கள் சிவஞான சித்தியாரில் உள்ளவை.

நாம் அனுபவிக்கும் வாழ்க்கைச் செல்வங்கள் அனைத்தும், சிவ சக்தியாகிய தேவியினால் நமக்குக் கிடைத்தவை. தேவியோ பரம் பொருளாகிய இறைவனை இன்றியமையாதவள்; என்றும் பிரியாதவள்.

"இறைவன் இறைவியை ஒரு கணம் விலகி ஒரு செயலுமின்றிச் சும்மா இருந்தாலோ! என்றும் பிரியாத இறைவி இறைவனைப் பிரிந்தாலோ! உலகுயிர்களின் கதி என்னாம்! இறைவனைப் பிரிந்த இறைவிதான் செய்யக் கடவது யாதோ! "அவனின்றி அணுவும் அசையாதே"

இவ்வாறாயதொரு கற்பனைக்கெட்டாத

---

தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

பகை, நட்பு, அயல் என்னும் மூன்றிடத்தும் முறை தவறாதுநடக்கப்பெற்றால், நேர்மை (நடுவுநிலமை) என்று சொல்லப்படும் ஓர் அறமே நல்லதாம்.

சம்பவம் கந்தபுராணத்தில் உமை கயிலை நீங்கு படலத்தில் வருகின்றது.

**தேவர்கள் நாயகன் செய லிலாமையால்**
**ஆவிகள் யாவையும் சடம தாகியே**
**ஓவிய மேயென உணர்வின் றுற்றன**
**பூவுல கேமுதற் புவனம் யாவினும்** (15)

**ஆட்டுவித் திடுபவன் அதுசெ யாவழிக்**
**கூட்டுடைப் பாவைகள் குலைந்து வீழ்ந்தென**
**நாட்டிய பரனருள் நடாத்த லின்மையால்**
**ஈட்டுபல் உயிர்த்தொகை எனைத்தும் மாய்ந்தவே.**

உயிர்கள் உயிர்ப்பின்றிச் சடப் பொருள்கள் போலாயின. ஒளிச் சுடர்கள் மறைந்தன. இருள் கவிந்தது. சர்வசங்கார நிலை போன்றதொரு நிலையை உலகு எய்தியது.

இறைவன் குறிப்பினால் சிவசாரூபம் பெற்ற வர்களுட் சிறந்தோரான பதினொருவர் உருத்திரர் மத்தியார்ச்சுனம் எனப்படும் திருவிடை மருதூருக்கு வந்து, நீண்டு செல்வ தாகிய இராத்திரியை நான்கு கூறு செய்து, சிவலிங்கப் பெருமானை நான்கு யாமத்தும், உலகுயிர்கள் உய்யும் பொருட்டு அர்ச்சனை செய்வாராயினர்.

**வான்குலாம் வில்லுவ மருமென் பாசடை**
**தேன்குலாம் மரையிதழ் செய்ய சாதிவீ**
**கான்குலாம் வலம்புரி கடவுட் டொல்பெயர்**
**நான்கியா மத்தினு நவின்று சாத்தியே.**

**ஏயவான் பயறுபால் எண்ணல் ஓதனம்**
**தூயநல் உணவினை தொகுத்துக் கண்ணுதல்**
**நாயகன் முன்னுற நான்கியா மத்தும்**
**நேயமொடு அம்முறை நிவேதித் தேத்தியே.**

விதிப்படி வழிபாடு செய்தபோது இறைவன் பிரசன்னமாயினான்; பிரம விஷ்ணுக்கள் துயில் புரிந்தெழுந்தவர்கள் போல எழுந்தார்கள். உலகுயிர்கள் உய்தன.

உருத்திரர்கள் பின்வருமாறு வேண்டுதல் செய்தார்கள்:

**நிற்றலும் அல்லி லெம்போல் நின்னடி எனையரேனும்**
**பற்றுடன் அருச்சித் தோர்க்குப் பழிதவீர் மாகத் திங்கள்**
**உற்றிரு கதிரு மொன்றும் ஒண்பகல் முதனாட் கங்குல்**
**பெற்றிடு சிறப்பு நல்க வேண்டுமாற் பெரும வென்றார்.**

நித்தலும் என்பது நிற்றலும் என நின்றது. நாள் தோறும் இராத்திரி காலத்தை நான்கு கூறு செய்து நான்கு யாமத்து வழிபாடும் செய்பவர் களுக்குச் சிவராத்திரி காலத்துச் செய்யும் பூசனையால் கிடைக்குஞ் சிறப்புக்கள் கிடைக்க வேண்டுமென்பது கருத்து. இதனாற் சிவ ராத்திரியின் தனிப்பெருஞ்சிறப்புச் சிந்திக்கற் பாலதாம். மாகத்திங்கள் - மாசி மாதம். இரு கதிரும் ஒன்றும் ஒண்பகல் - அமாவாசித்தினம். முதல் நாள் கங்குல் - சதுர்த்தசியின் இரவாகிய சிவராத்திரி.

சிவராத்திரி சிவவிரதம். நவராத்திரி தேவி விரதம். நவராத்திரி சிவ்ராத்திரிக்கு வழி செய்வது.

**"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான் "**

என்பது திருவருட்பயன். தேவி "தருஞ்சத்தி" தேவியே சிவத்தைத்தருபவள்.

நன்றி
சிவராத்திரி வெளியீடு

அதிகம் பேசுவதைக் காட்டிலும் குறைவாகப் பேசுவது நல்லது. குறைவாகப் பேசுவதைக் காட்டிலும் பேசாமல் இருப்பது நல்லது. பேசினால் உண்மையை அதிகம் பேசவேண்டும். பேசுவதை அன்பாகப் பேச வேண்டும் இந்த அன்பான வார்த்தைகளில் தர்மம் உள்ள காரியங்களைப் பற்றியே பேசவேண்டும் இதுவே ஒருவனை பெரிய மனிதன் ஆக்கும் என்று மகான்கள் கூறியிருக்கிறார்கள்.

***That quity which consists in acting with equal regard to each of (the three) divisions of men is a pre- eminent virtue.***

***111***

# வாழத் தகுதியுடையவன் யார்?

– சுவாமி விவேகானந்தர்

இந்தியாவில் வியாசர் என்னும் மகரிஷி ஒருவர் இருந்தார். இவரே வேதாந்த சூத்திரங்களை இயற்றியவராகக் கருதப் படுகிறார். சிறந்த மகான் அவர்.

அவரது தந்தை நிறைநிலையை அடைய முயன்றார். முடியவில்லை. அதுபோலவே அவரது பாட்டனும் முப்பாட்டனும் கூட முயன்று தோற்றுப் போனார்கள். வியாசரால் கூட முற்றிலுமாக அந்த நிலையை அடைய முடிய வில்லை.

ஆனால் அவரது மகன் சுகர் நிறைநிலை எய்தியவராகப் பிறந்தார். வியாசர் தன் மகனுக்கு ஞானத்தைப் போதித்தார். தாமே தத்துவ உபதேசம் செய்த பிறகு சுகரை ஜனகரின் அரசவைக்கு அனுப்பினார்.

ஜனகர் ஒரு மாமன்னர்; ஜனக விதேகர் என்று அழைக்கப்பட்டவர். விதேகர் என்றால் "உடம்பில்லாதவர்" என்று பொருள். மன்னராக இருந்தாலும் தான் உடம்பு என்பதை மறந் திருந்தார் அவர். தாம் ஓர் ஆன்மா என்ற உணர்வுதான் அவரிடம் எப்போதும் இருந்தது. அவரிடம் கற்றுக் கொள்வதற் காகவே சுகர் அனுப்பப்பட்டிருந்தார்.

பிரம்மஞானத்தைக் கற்பதற்காகச் சுகர் தம்மிடம் வரப்போவதை ஜனகர் அறிந்தார். எனவே முன்னேற்பாடாக அவர் சில காரியங்களைச் செய்தார்.

சுகர் அரண்மனை வாசலுக்கு வந்தபோது காவலர்கள் அவரை கண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. பிறகு ஓர் ஆசனம் மட்டும் அளித்தனர்.

மூன்று பகலும் இரவும் அவர் அப்படியே அமர்ந்திருந்தார். ஒருவரும் அவருடன் பேச வில்லை. "நீ யார்? எதற்காக வந்தாய்? என்று கூட ஒருவரும் கேட்கவில்லை. சுகரோ மகரிஷியான வியாசரின் மகன். வியாசரோ நாடு முழுவதும் போற்றிப் பாராட்டப்படுபவர். சுகரும் மிகுந்த மரியாதைக்குரிய ஒருவர். ஆனால் மிகச் சாதாரணமான கீழ்நிலைக் காவலர்கூட அங்கே அவரைப் பொருட் படுத்தவில்லை.

பின்னர் ஒரு நாள் மந்திரிகளும் உயர்பதவியில் உள்ள அனைவரும் திடீரென்று சுகரிடம் வந்து அவரைச் சிறப்பாக வரவேற்று மிகுந்த மரியாதையுடன் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றனர். அழகிய அறைகளைக் காட்டினர். வாசனைத் திரவியங்கள் கலந்த நீரில் குளிப்பாட்டினர். அற்புதமான ஆடைகளை அணிவித்தனர். எட்டு நாட்கள் இப்படி மிகச் சிறந்த ஆடம்பரத்தில் அவரை வைத்தனர்.

ஆனால் தமக்களிக்கப்பட்ட இத்தகைய மாறுபட்ட உபசரிப்புக்களினால் சுகரின் ஆழ்ந்த கம்பீரம் கலந்த அமைதி தவழும் முகத்தில் ஒரு சிறு மாற்றம் கூடத் தென்படவில்லை. வாசலில் காத்திருந்த போதும், இப்போது இந்த ஆடம்பரத்திலும் அவர் ஒருபோலவே இருந்தார்.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

நடுவுநிலைமை உடையவனது செல்வம் (பிறர் செல்வம் போல்) அழியாமல் நிலைத்து நின்று அவன் வழிவருவோர்க்கும் பாதுகாப்பாக அமையும். 112

பிறகு அவர் மன்னரின் முன்னிலையில் அழைத்துவரப்பட்டார். அரசர் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தார் அங்கே இசையும், நடனமும், வேறு பல கேளிக்கைகளும் நடந்து கொண்டிருந்தன.

மன்னர், சுகரிடம் ஒரு கிண்ணத்தில் விளிம்பைத் தொடும் அளவு பாலை ஊற்றிக் கொடுத்து, அதில் ஒரு துளிகூடச் சிந்தாமல் அந்தச் சபையை ஏழுமுறை சுற்றி வருமாறு கூறினார். பாலனாகிய சுகர் அந்தக் கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இசையும் இனிய முகங்களும் அலைமோதும் அந்தச் சபையை வலம்வரத் தொடங்கினார். மன்னர் விரும்பியது போலவே ஏழுமுறை சுற்றி வந்தார். ஒரு துளி பால் கூடச் சிந்தவில்லை.

அவரே அனுமதிக்காமல் உலகின் எதுவும் அவரது மனத்தைப் பாதிக்க முடியாது. கிண்ணத்தை அவர் ஜனகரிடம் கொடுத்தார்.

அப்போது ஜனகர் அவரிடம் “உன் தந்தை உனக்கு என்ன கற்றக் கொடுத்தாரோ, நீயாக எவற்றைக் கற்றுக் கொண்டிருக்கிறாயோ அவற்றை மீண்டும் சொல்லிக் கொடுக்கத்தான் என்னால் முடியும். நீ உண்மையை அறிந்து விட்டாய், வீடு செல்” என்றார்.

இவ்வாறு

தனக்குத்தானே கட்டுப்பாடு உள்ளவன்மீது வெளியிலுள்ள எதுவும் ஆதிக்கம் செலுத்த முடியாது. அவனிடமிருந்து அடிமைத்தனம் விடைபெற்றுவிடுகிறது. அவனது மனம் சுதந்திரமாகிவிட்டது அத்தகையவன் மட்டுமே இந்த உலகில் நன்றாக வாழ்வதற்குத் தகுதி உடையவன்

## *சைவப்பிரசாரகர் பயிற்சி ஆரம்ப விழா*

சைவ ஆலயங்கள் தோறும் சமயப் பிரசங்கம் செய்வதற்கெனத் தகுதிவாய்ந்தவர்களை உருவாக்க வெனப் பயிற்சி நெறி வவுனியா சண் தட்டச்சுப்பயிற்சி நிலையத்திற் கடந்த தைப்பூச நன்னாளிலே ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்குச் சிவபுரம் சிவன் கோவிற் பரிபாலன சபைத் தலைவர் திரு.செ.பத்மநாதன் தலைமைதாங்கி நெறிப்படுத்த திரு.சண்முகதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். சைவப்புலவர்மணி திரு.வ.செல்லையா, திரு.செ.அ.இராமஸ்சுவாமி, திரு.அமிர்தலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பயிற்சியாளர்களிற்கான கருத்துரை திரு. செ. நவநீதகுமார் வழங்கினார். பயிற்சியிற் பங்குபற்றியோர் சார்பாக திரு. உருத்திரகுமாரின் உரையும் திரு. நகுலேஸ்வரனின் நன்றியுரையும் இடம்பெற்றன.

***The wealth of the man of rectitude will not perish; but will bring happiness to his posterity.***

***112***

# ஸ்நானம்

ஸ்நானம் எட்டுவிதமாகும். அவை வருமாறு, வாருண ஸ்நானமாகிய ஜல ஸ்நானம், ஆக்கினேய ஸ்நானமாகிய விபூதி ஸ்நானம், மந்தர ஸ்நானம், மானத ஸ்நானம், என்னும் இந்த நான்கும் நித்ய ஸ்நானமாகும். திவ்விய ஸ்நானம், மாருத ஸ்நானம், கௌரவ ஸ்நானம், பார்த்திப ஸ்நானம் என்னும் இந்த நான்கும் நைமித்திக ஸ்நானமாகும். இவ்வாறு எட்டுவித ஸ்நானமும் கண்டு கொள்க. ஸ்நானம் செய்யாத பொழுது ஈரவஸ்திரத்தால் சர்வாங்கமும் துடைத்தல் கபில ஸ்நானமாகும். இவ்வாறு ஸ்நானபேதங்கள் பலவிதமாக சிவாகமங்களிலே கூறப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஜல ஸ்நானம் மந்திரத்தோடு கூடின தென்றும், மந்திரம் இல்லாததென்றும் இரண்டு விதமாகும். அவற்றுள் மந்திரத்தோடு கூடின ஸ்நானம் பிராமணரும் சிவதீக்ஷையுடையாரும் செய்யலாம். மந்திரமல்லாத ஸ்நானம் சிவதீக்ஷையல்லாதவர் செய்யலாம். ஆக்கிநேய ஸ்நானமாவது, விபூதியினாலே சிரசு முதல் சர்வாங்கமும் உத்தூளனம் செய்தல். அந்த ஸ்நானம் விருத்தருக்குரியது. அந்த ஆக்கினேய ஸ்நானமும் மந்திரத்தோடு கூடின தென்றும், மந்திரமில்லாததென்றும் இரண்டு விதம். மந்திர ஸ்நானமாவது, மந்திரத்தினால் ஸ்நாந பாவனை செய்தல். மானத ஸ்நாநமாவது, குருவின் உப தேசப்படி மனத்தால் நன்றாக ஸ்நான பாவனை செய்தல். திவ்விய ஸ்நான மாவது, சிறிது வெயிலோடு கூடிய மழையில் கிழக்கு முகமாய் நின்று, ஈசான மந்திரத்தையாவது தத்புருஷ மந்திரத்தையாவது உச்சரித்துக்கொண்டு கிழக்கு நோக்கி ஏழடி நடத்தல். இது மகேந்திர ஸ்நானம் எனவும் பெயர் பெறும். மாருத ஸ்நானமாவது, பசுக்கள் கூட்டமாக வரும் பொழுது அந்தப்பசுக்களுடைய குளப்படியிலுள்ள தூள்கள் காற்றினால் சர்வாங்கமும் தோயும்படி பார்த்துக்கொண்டு ஏழு அடி எதிர் நோக்கி நடத்தல். இதற்கு வாயு ஸ்நானம் என்றும் பெயருண்டு. பார்த்திப ஸ்நாநமாவது, மகத்தான சிவதலங்களிலே திருமண்ணாடுதல், மகா நதிகளிலேயுள்ள திருமண்ணை எடுத்து தான் இருக்கும் இடத்தில் வைத்துக்கொண்டு தான் வேண்டிய போது ஜலத்திலே கரைத்து சிரசிலே புரோக்ஷித்துக் கொள்ளுதல், அல்லது விபூதி தாரணம் போல் திரிபுண்டரமாகத் தரித்துக் கொண்டு அதன்மேல் விபூதியைத் தரித்தல். இவ்வாறு பார்த்திப ஸ்நானம் பல வகைப்படும். கௌரவ ஸ்நானமாவது, தனது ஆசிரியனுடைய இரண்டு திருவடிகளிலும் சந்தனத்தைப்பூசிக் கழுவியாவது அல்லது தண்ணீரால் கழுவியாவது அந்த ஜலத்தினாலே, சிரசு முதல், சர்வாங்கமும் ஸ்நானம் செய்தல் அல்லது சிரசிலே தரித்துக் கொண்டு உட்கொள்ளுதல். இந்தக் கௌரவ ஸ்நாநம் ஏனைய ஸ்நானங்களிலும் மிக விசேஷமாகும். இவ்வாறு எட்டுவித ஸ்நானங்களின் முறைமை கண்டு கொள்க. மகாதேவருடைய அபிஷேக நிர்மால்யத்தை ஒரு குடத்தில் ஏந்தி வந்து அந்தச் சிவதீர்த்தத்தினால் சர்வாங்கமும் ஸ்நானம் செய்தல் சிவநிர்மால்ய ஸ்நானமாகும். இந்த ஸ்நானம் குட்டநோய் முதலான பெரு நோய்களையும், பூதப்பிரேத, பிசாச, பிர்மம, ராக்ஷசர்களையும் போக்கும். பிள்ளை இல்லாதவர் நாற்பத்தைந்து நாள் இந்த ஸ்நானம் செய்யின், பிள்ளைப்பேறு உண்டாகும்.

சைவபூஷணம்

நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல்.

தீங்கின்றி நன்மையே தருவதானாலும், நடுவுநிலைமை தவறுவதால் வரும் ஆக்கத்தை, அப்பொழுதே விட்டு விட வேண்டும். 113

# சிவராத்திரி

-திருமுருக கிருபானந்தவாரியார்

சிவம் என்ற சொல்லுக்கு துக்காதிகளைப் போக்குகின்ற என்பது பொருள் "ச்சதி துக்காதிகமிதி சிவா" ராத்திரி என்ற சொல்லுக்கு சுகத்தை செய்கின்ற என்று பொருள். "ராதி - சுகமிதி - ராத்திரி" என்ற துக்கத்தை நீக்கிச் சுகத்தைச் செய்கின்ற இரவு சிவராத்திரி எனப்படும்.

சிவ விரதங்கள் எட்டு: அவற்றுள் சிவராத்திரி ஒன்று. இது மாசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி திதியன்று வருவது. அதிகாலையில் நீராடி திருநீறு அணிந்து உருத்திராட்ச மாலை பூண்டு, சிவபூஜை செய்து, திருவைந்தெழுத்து ஓதவேண்டும். பகல் முழுவதும் உபவாசம் இருத்தல் வேண்டும். மாலையில் மீண்டும் நீராடி, சிவாலயம் சென்று வழிபடவேண்டும். முடியுமானால் நெய்விளக்கு ஏற்றி, மலரால் அர்ச்சனை செய்வித்து, உள்ளங் குழைந்து உருகி, தேவாரம், திருவாசகங்களை ஓதி, துதி செய்து, வலம் வந்து அஷ்டாங்க வணக்கம் புரிந்து வழிபாடு செய்தல் வேண்டும்.

நான்கு காலங்களிலும் சிவபூஜை செய்ய வேண்டும். சிவ பூஜை செய்ய இயலாதவர்கள், நான்கு காலங்களிலும் கோயிலில் நடைபெறும் பூஜைகளில் கலந்துகொண்டு தெரிசிக்க வேண்டும். நிரம்பிய அன்புடன் திருவைந்தெழுத்து ஓதுதல் இன்றியமையாதது; மறுநாள் காலை நீராடி வழி பட்டு பாராயணம் புரிந்து விரதத்தை முடிக்க வேண்டும். இங்ஙனம் புரிந்தோர் களுடைய சகல வினைகளும் நெருப்பில் விழுந்து பஞ்சுப் பொதிபோல் எரிந்து கரிந்து சாம்பலாகும்.

பிரமனும், திருமாலும் நான் பிரமம் நான் பிரமம் என்று தருக்கமிட்டுப் போர் புரிந்தனர். அவர்கள் இடையே அடி முடி காணமாட்டாமல் ஒரு தாணுசோதிமயமாய் நின்றது. அப்படித் தோன்றிய நாள்தான் சிவராத்திரி. அக் காலம் மாசி மாதம் கிருஷ்ணபட்ச, சதுர்த்தசி திதி, சோமவாரம், திருவோண நட்சத்திரம் கூடிய புண்ணிய காலம் என்க.

பிரமதேவனும் திருமாலும் துதிக்க அவர்கள் முன்னர் அத்தாணுவில் சிவமூர்த்தி உருவமாகத் தோன்றியருளிய இரவு 14 நாளிகைக்கு மேல் என உணர்க. அவ்வாறு சகளீகரித்த சிவமூர்த்தி, மாலயனாதி வானவர் யாவர்கட்குந் திருவருள் புரிந்தனர்.

இச் சிவராத்திரியன்று 14 நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலத்தில், சிவபஞ்சாக்கரம் ஜெபிப்போருக்கு எண்ணற்ற அதிக பலன் உண்டு.

ஞாலங் கருதினுங் கைகூடும் காலங்
கருதி இடத்தாற் செயின்.

என்பார் திருவள்ளுவ தேவர்.

காலத்திற் செய்கின்ற கருமங்கள் ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி நன்மை செய்யும். "பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழியையும் உன்னுக. காலம் அறிதல் என்ற ஒரு அதிகாரமே அமைக்கின்றார் வள்ளுவர்.

ஆதலால் புண்ணிய விரத நாட்களில் செய்கின்ற தானத்திற்கும், ஜெபத்திற்கும் நிரம்பிய பலன் உண்டு. விரதங்கள் தொன்று தொட்டு வந்த பழக்கம். விரதாதிகளை யநுஷ்டிக் காதவர்கள். நரகுறுவர் என்பர் அருணகிரிநாதர்.

"சூழ் விரதங்கள் கடிந்த குண்டர்கள்
வாதை நமன்றன் வருந்திடுங் குழிவிழுவாரே"

நதிகளில் சிறந்தது கங்கை; விண்மீன்களில் சிறந்தது கதிர்; மரங்களில் சிறந்தது கற்பகம்; தேவர்களில் சிறந்தவர் திருமால்; பசுக்களில்

*Forsake even in the moment (of acquisition) that gain which though it should bring advantage is without equity.* 113

சிறந்தது காமதேனு; யானைகளில் சிறந்தது ஐராவதம்; மலரில் சிறந்தது தாமரை; புதல்வரிற் சிறந்தவர் குமாரக் கடவுள்; மலைகளில் சிறந்தது இமயம்; இவைகளைப் போல் விரதங்களில் சிறந்தது சிவராத்திரி.

சிவராத்திரியில் சிறந்த நேரம் இலிங்கோத்பவ காலம். இலிங்கோத் பவ காலம் என்பது இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த நேரம் என அறிக. இரவு 11.30 மணிக்கு மேல் 1.00 மணி வரை எனவுணர்க.

உபவாசத்தினால் உடல் நலத்திற்கும் வழியுண்டு. சதா உண்டு உண்டு வயிற்றை நிரப்புகின்றோம். உணவுகளை அரைத்துச் செரிக்க வைக்கும் கருவிகளுக்கு மாதத்திற்கு ஒரு நாள் அல்லது ஆண்டிக்கு ஒரு நாளாவது பூரண ஓய்வைத் தரவேண்டாமா? அவ்வாறு தருவதால் மிகுந்த உடல் நலம் உண்டாகும். உபவாசத்திற்கு மறுநாள் உடம்பு மிக்க ஆரோக்கியமாக இருக்கும்.

இரண்டாவது, உணவு இன்றி உபவாசம் இருப்பதனால் மனம் முதலிய கருவிகரணங்கள் ஒடுங்கும். அதனால் தியானம் புரிய நிரம்ப வசதியுண்டு. நன்றாக செப தபம் புரியவும் இறைவனை ஒரு மனதுடன் வழிபடவும் முடிகின்றது. ஆதலால் உபவாசத்தை எல்லோரும் சிவராத்தியில் மேற்கொள்வது உத்தமம். தோசை, இட்டிலி, உப்புமா இவைகளைத் தின்று இருக்கின்றது விரதம் ஆகாது. அது விரதமல்ல; விரோதம்.

சிவராத்திரியன்று விடையவராம் சடை முடியண்ணலை வழிபட்டு வரம் பெற்றோர் பலர். மற்றைய நாட்களில் ஆயிரம் பஞ்சாக்கரம் ஜெபித்த பயன் சிவராத்திரியில் ஒரு பஞ்சாக்கரம் ஜெபித்தால் வரும். இகபர நலன்களை எளிதில் தரவல்லது சிவராத்திரி.

### மகா சிவராத்திரி காலங்களிலும் சிவபெருமானை பூசிக்கும் முறை

| உபசாரம் | முதலாங் காலம் | இரண்டாம் காலம் | மூன்றாம் காலம் | நான்காம் காலம் |
|---|---|---|---|---|
| அபிஷேகம் | பஞ்சகௌவியம் | பஞ்சாமிர்தம் (தேன்,சர்க்கரை, பால் தயிர், நெய்) | தேன் | கருப்பஞ்சாறு |
| ஆடை | பட்டு | பருத்தி | கம்பளி | மலர் ஆடை |
| வண்ணம் | சிவப்பு | மஞ்சள் | வெள்ளை | பச்சை |
| அலங்காரம் | வில்வம் | தாமரை | சாதிமல்லி | நந்தியாவர்த்தம் |
| அருச்சனை | தாமரை | துளசி | வில்வம் | நீலோத்பலம் |
| நிவேதனம் | பொங்கல் | பாயசம் | எள்ளன்னம் | சுத்தான்னம் |
| பழம் | வில்வம்பழம் | பலாப்பழம் | மாதுளம்பழம் | வாழை முதலிய பலவகைப் பழங்கள் |
| வேதம் | இருக்கு | யசுர் | சாமம் | அதர்வணம் |
| திருமுறை | சிவபுராணம் | இருநிலனாய் (நின்ற திருத்தாண்டகம்) | லிங்கபுராணக் குறுந்தொகை | போற்றித்திருத் தாண்டகம் |

தக்கார் தகவுஇலர் என்பது அவர் அவர்
எச்சத்தால் காணப்படும்.

இவர் நேர்மையுடையவர் அல்லது இல்லாதவர் என்ற உண்மை, அவரவர்க்குப்பின் எஞ்சி நிற்கும் புகழ், பொருள், பழி (மரபு) வழியால் அறியப்படும். 114

# சொற்பதம் கடந்த தொல்லோன்

-சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம்

பன்னிரு திருமுறைகளில் திருவாசகத்திற்குத் தனியிடம் உண்டு. நெஞ்சை நெகிழ்விக்கும் திருவாசகப் பாட்டல்களில் உலகியல் வழக்கு, அருளியல், அனுபவக் கருத்துக்கள் என்று பலவற்றைக் காணலாம்.

சமய நோக்கில் மட்டுமின்றி அறிவியல் நோக்கிலும் சிறந்து விளங்கும் இந்நூல் அறிவியற் கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய சிறப்புக்களை மிகுதியாகக் கொண்டது அதிலுள்ள திருவண்டப்பகுதி. அதிலே தன்னை ஆட்கொண்ட இறைவனின் தன்மையைப் பலபட விளக்குகிறார். அவர் தரும் விளக்கங்களில் "சொற்பதம் கடந்த தொல்லோன்" என்பதும் ஒன்று. இத்தொடர் திருவண்டப்பகுதியில் இரு இடங்களில் வருகிறது.

சொற்களால் வர்ணிக்க முடியாத பழமை வாய்ந்தவன் இறைவன் என்பது இத்தொடரின் நேரடிக்கருத்து. இது பல சமயத்தவருக்கும் உடன்பாடான கருத்தே.

**பலவகை நெறிகள்**

கடவுளைக் காணப் பலவித வழிகளைக் காலத்துக்குக் காலம் பலர் கூறிவருகின்றனர். வேறுபட்ட தியான வழிகள், யோகநெறிகள், சமயக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லோரும் தத்தம் நெறிகளே கடவுளைக் காட்டவல்லன என்று கூறுகின்றனர். தமது வழியில் சென்று கடவுளைக் கண்டதாகவும் சொல்கிறார்கள்.

இந்த நெறிகள் ஒருவித மன அமைதியையும், சில வேளைகளில் உளவியல் சார்ந்த பொது நிலைப் புலனுணர்வு கடந்த காட்சிகளையும் (Extra Sensory Perceptions) வியத்தகு நிகழ்ச்சிகளையும் (Miracles) தருவதுண்டு. இங்ஙனம் பெற்ற அனுபவங்களை இறையியல் அனுபவங்களெனப் பலர் மயங்குகின்றனர். அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் உருவாவதையும் உருவாக்கப்படுவதையும் அவ்வப்போது காணக்கூடியதாக இருக்கிறது.

இவர்கள் கண்டவையெல்லாம் கடவுட் சாட்சியல்ல. ஆயினும் வெவ்வேறு வழிகளில் சென்று அவர்கள் பெற்ற அனுபவங்களும் அவனருளால் வந்தவையே. இறைவனைக் காண்பதற்கு அவர் கடைப்பிடித்த வழியே ஏற்றதென்று எண்ணுபவருக்கு, அவரின் வழியிற் பெற்ற அனுபவத்திற்குத்தக அவன் தன்னை உணர்த்துகின்றான். இங்ஙனம் உணர்த்தினும் தன் உண்மை இயல்பைக் காட்டாமல் ஒளித்தே இருக்கின்றான். இதனை மாணிக்கவாசகரே விளக்குகிறார்.

"இத்தந்திரத்தில் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந்திரத்தில் அவ்வயின் ஒளித்தும்"
- (திருவண்டப்பகுதி)

இப்படி வேறுபட்ட நெறிகளில் செல்பவர்களில் "சப்தப் பிரம வாதிகள்" என்பவர் ஒரு வகையினர்.

**நாதமே பிரமம்**

சொல் ஒலி வடிவானது. அது பொருளைக் குறிப்பது " எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே" என்பது தொல்காப்பியம்.

நாம் பேசும் அல்லது கேட்கும் சொற்கள் முதலில் கேட்கப்படாத, மொழி வேறுபாடற்ற, நுண்ணிய நிலையில், சூக்குமை வாக்காக உள்ளது. இது நாத தத்துவத்தில் தோன்றுவது. இதனால் நாதமே முடிந்த முடிவானது; அதற்கு மேல் எதுவும் இல்லை; அதுவே பரம்பொருள் என்பது சப்தப் பிரமவாதிகள் கருத்து. இதனைக் கருத்திற் கொண்டு மேற் கூறப்பட்ட தொடருக்குப் பொருள் கண்டு விளக்கப் படுவதுமுண்டு.

சொற்பதம் - சூக்குமை நிலை; அது நாத தத்துவம். சப்தப் பிரம வாதிகள் "நாதமே பிரமம் அதனில் மேற்கண்ட பொருள் இல்லை" என்பர். அஃது உண்மையன்று என்பதற்கு "அதனைக்

*The upright and the crooked may be known by (the character of) their off spring.* **114**

கடந்த தொல்லோன் இறைவன்" என்று அருளினார்.

- (திருவாசகம் தருமையாதீன வெளியீடு, எண் 572,1996)

**மொழியின் ஆற்றலின்மை**

உலகம் பொருட்களையும் உலகியல் அனுபவங்களையும் விளக்க சொல் அல்லது மொழி இயல்பாக அமைந்த சாதனம். மனிதனின் அறிவும் எண்ணமும் காலப்போக்கில் வளர்ச்சி யடைந்தும் மாறுபட்டும் வந்துள்ளன. இதற்கமைய இது அறிவியல் அல்லது விஞ்ஞானத் துறையில் மிகுதியாகக் காணப்படுகிறது.

காலத்துக்குக் காலம் ஏற்படும் விஞ்ஞானத் துறை சார்ந்த சில ஆய்வுகள், சிந்தனைகளை விளக்க, அப்போது வழக்கிலுள்ள மொழிக்கு ஆற்றல் இல்லை என்பதை விஞ்ஞானிகள் உணர்ந்தனர். இதனால் புதிய சொற்கள், சொல்லாட்சிகள், மொழி குறித்த புதிய கோட்பாடுகள் முதலியன உருவாக வேண்டிய தேவை ஏற்பட்டது.

இத்தகைய மாற்றங்களும் வளர்ச்சியும் ஏற்பட்டும் மொழியால் சில விஞ்ஞான ஆய்வு முடிவுகளை, குறிப்பாக அணுவியல் சார்ந் தவற்றை விளக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஹைசென் பெர்க் என்ற விஞ்ஞானி இது குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்.

"But the Problem of language here are really serious. We wish to speak in some way about the structure of the atoms ...... But we cannot speak about the atoms in ordinary language" - (Weiner Heissenberg Physics and Physiology, 1963)

"ஆனால் மொழி குறித்த சிக்கல் உண்மையி லேயே கவலை அளிப்பதாக உள்ளது. அணுக் களின் உள்ளமைப்புப் பற்றி ஏதாவது ஒரு வழியில் விளக்க நாம் விளைகிறோம்...... ஆனால் அணுக்களைப் பற்றிச் சாதாரண மொழியில் நாம் விளக்க முடியா திருக்கிறது."

மொழி குறித்த புதிய தேவைகளும் மாற்றங்களும் அறிவியல் துறையில் கண்ட அளவுக்கு இறையியல் துறையில் தேவைப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் மொழியால் அணுத்தன்மையை விளக்க முடியா திருப்பது போன்றே இறையியல்பையும் விளக்க முடியாதிருக்கிறது. இங்கே "அணுத்தரும் தன் மையில் ஐயோன் காண்க" என்னும் திருவாசகத் தொடர் சிந்தனைக்குரியது மணிவாசகரின் இக்கூற்று இறையியல்பை விளக்க மொழியின் ஆற்றலின்மையை உணர்த்துவதோடு, அணுத் தன்மையை விளக்குவதில் இன்றைய விஞ்ஞானி களுக்குள்ள சிக்கலையும் பிரதிபலிப்பதாக உள்ளது.

**சித்தாந்த விளக்கம்**

சைவ சித்தாந்த அடிப்படையில் மாயையைச் சொல்லுலகம் (சப்தப்பிரபஞ்சம்) பொருளுலகம் (அர்த்தப் பிரபஞ்சம்) என இருவேறு நிலைகளில் பார்ப்பதுண்டு. சொல் என்பது வாக்கு நான்கு என்றும் கூறப்படும். சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்று வாக்கு நான்கு வகையாக விருத்தியடைகிறது.

மிக நுண்ணிய நிலையில் ஒலிவடிவாய்ச் சூக்குமை வாக்கு நாபித்தானத்தில் தோன்று கிறது. அது விருத்தியடைந்து, சொல்விளங்கியும் விளங்காத நிலையில் மேலெழுந்து பைசந்தி வாக்கென்ற பெயரில் நிற்கிறது. இந்த இரண்டு நிலைகளையும் அறியும் ஆற்றல் பெற்ற ஞானிகளால் ஒருவன் சொல்ல வருவதை, அவனின் மொழியைத் தெரியாதுவிடினும், கூற முடியும். இத்தகைய ஆற்றலுள்ளவரையும் கடவுளைக் கண்டவராகக் கருதிச் சிலர் மயங்குதலுண்டு. இந்த ஞானிகளின் சொல்லிலும் இறைவனின் இயல்பு தெரிவதில்லை.

பைசந்தி வாக்கு விருத்தியடைந்து விளங்கும் நிலையில் மத்திமை வாக்கு எனப்படுகிறது. இந்நிலையில் மொழி விளங்கித் தோன்றுகிறது. ஆனால் வெளியில் சொல்லவும் கேட்கவும் படாத நிலையில் குரல் அடியில் தென்படுகிறது. இது பின்னர், கேட்கப்படும் சொல்லாக, வைகரி வாக்காக, வெளிவருகிறது.

சூக்குமை வாக்கு நாத தத்துவத்தில் சுத்த மாயையின் விருத்தியாக வருவது. ஆகவே சொல் அல்லது மொழி நாதத்துவத்தை மூலமாகக் கொண்டு தோன்றுவது என்பது குறிப்பிடத்

கேடும் பெருக்கமும் இல்அல்ல செஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

கேடும் ஆக்கமும் யார்க்கும் இல்லாதவை அல்ல (முன் வினைப் பயனுக்கு ஏற்ப, ஏற்கனவே எல்லார்க்கும் விதிக்கப்பட்டுள்ளன). ஆகையால் நெஞ்சில் நடுவுநிலைமை தவறாது இருப்பதே சான்றோர்க்கு அழகாகும்

தக்கது. இறைவன் தத்துவங்களைக் கடந்தவன். ஆகையால் அவன் இயல்பைச் சொற்களால் விளக்க முடியாதென்பதும். அவன் சொற்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதும் தெளிவாகிறது.

இந்த நிலையில் தமது இறையனுபவத்தை விளக்க அருளாளருக்கு மொழி ஆற்றலற்றதாக உள்ளது. இதனாலேயே இறையனுபவம் குறித்த அவர்கள் பேச்சு பலவேளைகளில் முரண்பாடுகள் கொண்ட சொற்களாக (Paradox) எமக்குத் தென்படுகிறது. மொழிக்கு அப்பாற்பட்ட ஒன்றாக அவர் உரை உள்ளது. இது குறித்து சுசுக்கி என்னும் புத்தமத அறிஞர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

" The contradiction so puzzling to the ordinary way of thinking comes from the fact that we have to use languege to communicate our inner experience which in its very nature transcends linguistics" -(D.I. Susuki on Indian Mahayana Buddism. 1968)

"சாதாரண சிந்தனை வழியின் காணமுடியாத புதிர்நிறை முரண்பாடுகளுக்கு அவை கொண்ட பேச்சுக்குக், காரணம், மொழியியல் கடந்த தன்னியல்பு கொண்டதாகவுள்ள எமது அக அனுபவங்களை மொழி மூலம் விளக்க வேண்டியிருப்பதே"

ஆகவே இறைவனின் இயல்பை விளக்க வழக்கிலுள்ள மொழிகளுக்கு ஆற்றலில்லை என்பதும், அவன் சொற்பதம் கடந்தவன் என்பதும் அருளாளரின் அனுபவ வாயிலாக அறியக் கிடக்கின்றது. மணிவாசகரின் இது குறித்த சொற்றொடர் அருளனுபவத்தை மட்டுமன்றி இன்றைய அறிவியற் கருத்துக்களையும் உணர்த்துவதாக உள்ளது.

**முன்னைப் பழம் பொருள்**

தொல்லோன் என்ற சொல் பழமையானவன் என்ற பொருள் தருவது. உலகை உள்ளடக்கிய இந்த அண்டம் முன்னொரு காலத்தில் சிறு பிரபஞ்ச முட்டையாக (Cosmic egg) இருந்து, பின் வெடித்துப் பரந்து மீன்களையும் கோள்களையும் உள்ளடக்கியதாக இன்று விரிந்துள்ளது என்பது விஞ்ஞானிகளின் கருத்து. இது மீண்டும் ஒரு கால் ஒடுங்கும் என்பதும் அவர்களின் கருத்து. இதனை மாணிக்க வாசகரும் தன் திருவண்டப்பகுதியில் கூறுகிறார்.

இந்த அண்டத்தின் தோற்றத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமானவன் இறைவன் என்பது சைவத்தின் கொள்கை. அவன் இந்த அண்டம் தோன்று முன்பே இருந்து அதனைத் தோற்றவித்தவன் என்பதால் அவனை முன்னைப் பழம் பொருள் என்பது பொருத்தமாகும். ஆயினும், மாணிக்கவாசகர் தமது திருவெம்பாவையில் அவனை "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளே" என்கிறார்.

தோற்றமும் பின்வரும் ஒடுக்கமும் ஒரு முறை மட்டும் நிகழ்வதில்லை. பல முறை நிகழ்ந்துள்ளன என்பதும் இன்றைய விஞ்ஞானக் கருத்து. ஒவ்வொரு ஊழிக்காலத்திலும் இந்த அண்டம் ஒடுங்கிய பின் தோற்றுகிறதென்றும், பல ஊழிக்காலங்களாக இறைவன் ஒடுக்கத்தையும் தோற்றத்தையும் செய்து வருகிறான் என்றும் சைவம் கூறுவது குறிப்பிடத் தக்கது. இதனை எண்ணும் போது, மாணிக்கவாசகர் இறைவனை "முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே" என்று குறிப்பிடுவதன் பொருள் தெளிவாகிறது. "தொல்லோன்" என்று அவர் குறிப்பிடுவதும் இந்தப் பொருளிலே என்றும் கருத வேண்டியுள்ளது.

ஆகவே, மாணிக்கவாசகரின் "சொற்பதம் கடந்த தொல்லோன்" என்னும் சொற்றொடர் இறையியல் அனுபவத்தையும், சைவத்தின் தத்துவக் கொள்கையையும் விளக்குவதோடு இன்றைய விஞ்ஞானக் கருத்துக்களையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளதைக் காணலாம்

நன்றி
சித்தாந்தம்

***Loss and gain come not without cause; it is the ornament of the wise to preserve evenness of mind (under both). 115***



# நந்திக் கொடி



- மணிப்புலவர்

நந்தி சைவ உலகில் பிரசித்தமானது. நந்தியில்லாச் சைவமில்லை. ஏன்? தமிழுமே யில்லை! சைவம் வேறு, தமிழ் வேறு அல்ல. இரண்டுமே பிரிக்க முடியாதவை. உள்ளமும் உணர்வும்போல, உரையும் ஒன்று பொருளும் போல. எந்த ஒரு சைவசமயிக்கும் நந்தி என்பது மிகபரிசயமானது. பாமரர்க்கும் அது தெரிந்த சொல், பண்டிதர்க்கு விரிந்த ஒரு சொல், பாரமானது; பொருளின் அந்தத்திற்குப் போக முடியாத சொல்; புரிந்து கொள்ள முடியாத சொல்.

சிவன் கோவில்களிலே வீரபத்திரர் கோவில் களிலே கொடிக் கம்பத்துக்கு முன்னமைந்துள்ள பலி பீடத்துக்கு முன்னால் சுவாமியைநோக்கிய வண்ணம் அமர்ந்திருப்பவர் நந்தி. இக்கோவில் களின் உற்சவகாலங்களிலே அடியார் கொடி குடை ஆலவட்டம்தாங்கப் பெருமான் வீதிவலம் வருவர். இவற்றில் இலங்குபவர் நந்தி. வாகனமாக அமைவது நந்தி. "நந்திவர்மன்", அருணந்தி சிவாச்சாரியார், அருணந்தி, நந்தினி என்னும் பெயர்கள் தமிழ் மக்களிடையே பிரபலமானவை. நந்தி பொறித்த நாணயங்கள் முற்காலத்தில் தமிழ் நாட்டில் புழக்கத்தில் இருந்துள்ளன. சிந்து வெளி நாகரிக காலத்தைய நந்தி உருவங்களும், நந்தி பொறித்த நாணயங்கள் மொகஞ்தாரோ கரப்பா ஆகிய இடங்களிற் புதைபொருள் ஆராய்ச்சி மேற் கொள்ளப்பட்ட போது வெளி வந்தமையுங் கருத்திற்குரியது. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தும் உப யோகத்தில் இருந்தன, நந்திக் கொடியும் இருந்துள்ளது. நந்திக் கலம்பகம் எனப் பெயரிய தமிழ்ப் பிரபந்த நூலொன்றும் உள்ளது என்பதையும் நாம் மறந்து விடலாகாது. சோதிடத்தில் நந்திவர்க்கியம் என இருப்பதையும் உன்னுக. ஆகவே நந்தி என்பது எங்கட்குப் புதிதான ஒன்றல்ல.

"நந்தி" என்றதும் சைவப் பெருமக்கள் உள்ளத்தில் ஓடி வருபவர் இடபதேவரே! நந்திக்கு இன்னொரு பெயர் இடபம். உண்மையில் "நந்தி" என்பது சிவனையே குறிக்கும். "நந்தி ஈச்சுரன் ஏறூர்ந்தான் நக்கன்மாஞானமுர்த்தி " எனச் சூடாமணி நிகண்டு சிவன் பெயர்களைச் சொல்லும் போது நந்தி என்பதையே முதற்கண் குறிப்பிடுகிறது. திருமூலரும் சிவபிரானை "நந்தி" என்றே தமது திருமந்திரத்திற் பல இடங்களிலும் குறிப்பிடுவர். "நந்திமகன்றனை" "நந்தியை எந்தையை, "நந்தி திருவடி நான் தலை மேற் கொண்டு", எனு ஆங்காங்கு வருதல் காண்க.

"நந்தி" என்பதன் அர்த்தம் என்ன? ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலுக்கு ஏற்ப விளக்கம் தருவர். கொழும்பு அருளொளி நிலையத்தைச் சேர்ந்த அருட்டிரு அடியார்க் கடியான் கே. சிவகுருநாதன் அவாகள் தரும் விளக்கம் இது. ஒரு யோகியானவன் பத்மாசனமிட்டுத் தவத்தில் இருக்கும் போது அவனது மூலாதாரத்தில் மூண்டெழும் அனலைச் சூரிய சந்திர கலைகளாகிய சுவாசத்தால் மேலெழச்செய்து ஆறாதாரங்களிலுமுள்ள தடை களைக் கடந்து சிதாகாயத்திற் சுழுனை வழியே ஏற்றி நிராதாரத்துட் செலுத்த, அது அங்கு ஒளிமயமாகப் பிரகாசிக்கும். இப்படிப் பிரகாசி க்கும் (அனல்) தீ எமது காயக் கோவிலிற்

---

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவுஒரீஇ அல்ல செயின்.

தன் மனம் நடுவுநிலைமை நீங்கித் தீயவற்றைச் செய்யக்கருதுமானால், (அதனைத் தன் கேடறி விக்கும் தீக்குறியாகக் கொண்டு) "நான் இனிக்கெடப் போகிறேன்" என்று அறிந்து கொள்ள வேண்டும். 116

பிரகாசிப்பதால், அது நம் + தீ = நந்தி என்று பெயர் பெற்றது. "மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக், காலால் எழுப்புங் கருத்தறி வித்து" என்ற ஒளவைப் பாட்டியின் "விநாயகர் அகவல்" அடிகளை நோக்குக. அனல் - கனல் - தீ ஒரு பொருட் சொற்கள். "நம் + தீ = நந்தி என்றதில் நம் என்பது நமது, எமது எனப்பொருள்படும். தீ என்பது குறுக்கல் விகாரத்தால் "தி" ஆகியது.

இந்த நந்தி நாமம் இடபத்துக்கு ஆகியது எப்படி? சிலாதர் என்ற ஒருவர், அவர் முனி சீரேஷ்டர், யாகம் ஒன்று செய்ய விரும்பினார். வேண்டிய ஆயத்தங்களைச் செய்தார். யாக சாலை அமையும் இடம் சுத்தி செய்யப்பட வேண்டியது முதற் கவனிக்கப்பட வேண்டும். இதற்காக அந்த இடம் உழப்பட்டது. உழுத போது பெட்டகம் ஒன்று மேலே கிழம்பியது. அப் பெட்டகத்தைச் சிலாதர் திறந்தார். குழந்தை ஒன்று பெட்டகத்துள் இருந்தது. முனிவர் மிக மகிழ்ந்தார். குழந்தைக்குச் 'செபேசர்' எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். செபேசர் பதினாறு ஆண்டுகால எல்லக்குள் சகல கலைகளிலும், வேதாகம புராணேதிகாசங்களிலும் வல்லுன ரானார். சிவனடி மறவாச் சிந்தையரானார். ஐந்து வகை நீர் கொண்டு சிவபெருமானுக்கு அபி டேகஞ் செய்தார். சிவபெருமான் பெருமகிழ் வெய்தினார். திருவடித் தீட்சை செய்து அவரை ஆட்கொண்டருளினார். திருநந்தி தேவன் என்னும் தனது நாமத்தையே செபேசருக்குஞ் சூட்டினார். செபேசர் நந்தியான - நந்தி கேஸ்வரரான வரலாறு இது. நந்திகேஸ்வரர் கைலாயஞ் சென்றார். மாதொருபாகர் வருக்குச் சாரூப பதவியை அளித்தார். அன்று தொட்டு நந்திகேஸ்வரர் சிவபெருமானுக்குத் தொழும் படியரானார். வாயிற் காவலராகவும் ஆனார். கையிலையில் நந்தி தேவரின் உத்தரவின்றி முப்பத்து முக்கோடி தேவரோ, தேவர்கோவோ அன்றி மூவரோ அல்லது பல்வேறு கணத்தவரோ எதுவுஞ் செய்ய முடியாது. இவர் அனுமதி பெற்றன்றி எவருங் கைலையஞ் சன்னி தானத்திற் காலடியெடுத்து வைக்க முடியாது. இக்கட்டுப் பாட்டை மீறுவோரை இவர் கையிற் பொற்பிரம்பு பதம்பார்த்து விடும். எந்தச் சிவசன்னிதானத்தும் இதே நிலை தான். சிவசன்னிதானங்கட்கு வழிபாடு செய்யப் போவோர் நந்தியெம் பெருமானின் அனுமதி பெற்றே வழிபாடு செய்ய வேண்டும். பிரதோஷ விரதத்தில் இவருக்கு உள்ள சிறப்பு அபாரமானது. அபாரமானது என்ற சொல்லுப் போதாது.

சிவசன்னிதானத்தில் வழிபாடு செய்ய இவர் அனுமதி பெற வேண்டியது போல் எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் புறம்பானதாயி ருந்தாலும் - சிவசன்னிதானத்திற் சிவதெரி சனை செய்து கொண்டு சண்டீசரை வழிபட்டு அவர் அனுமதி பெற்ற பின்னரே நாம் வெளியே வர வேண்டும். இன்றேல் சிவ தெரிசனஞ் செய்த பலன் நமக்குக் கிடையாது. சிவதாண்டவப்போது அத்தாண்டவத்துக்கு - நடனத்துக்கேற்ப - முழவம் வாசிப்பவரும் நடனத்தைச் சதா தெரிசித்து இடையறா இன்பில் திளைத் திருப்பவரும் நந்தி! நந்தி மத்தளம் கொட்ட என்பது தமிழ்க் கீர்த்தனங்கள் ஒன்றில் உள்ள அடி ஒன்றின் ஒரு பகுதி. முழவு, மத்தளம், மிருதங்கம் ஓரின்ச் சொற்கள். தமிழ் நாட்டிலே மிருதங்க மேதைகள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் எல்லாரும் நந்தி பகவானின் கடாட்சம் பெற்ற வர்களாகப் போற்றப் பெற்றனர். பழனி சுப்பரமணியபிள்ளை - மிருதங்க வித்துவான் - நந்தி பகவானின் அவதாரமேயென எல் லோராலும் போற்றிப் பாராட்டப் பெற்றவர்.

மீன் வலை வீசிய திருவிளையாடலில் அந்தப் பொல்லாத சுறாவாக வந்தவர் நந்தி என்னும் திருவிளையாடற் புராணம். திருப்புன்கூர்த் தலத்திலே, முகப்பிலே வெகுதூரத்திலே நின்ற நந்தனாருக்குச் சன்னிதானக் காட்சி தெளிவாகத் தெரியவில்லை நந்தி மறைத்துக்

*Let him whose mind departing from equity commits sin well consider thus with himself " I shall perish"* 116

கொண்டிருந்ததனால், நந்தனார் இறைவற்கு எடுத்தியம்பினார். தம் உண்மை அடியார்க்கு ஏற்பட்ட இக்கட்டை இறைவனாற் சகிக்க முடியவில்ல. தம்மெதிரிலிருந்த நந்திக்கு கட்டளையொன்று இட்டார். "சற்றே விலகி யிரும் பிள்ளாய் – சன்னிதானம் மறைக்குதாம்" என்பது அந்தக் கட்டளை. நந்தி சற்று விலகினார். திருநாளைப் போவார் சன்னிதானக் காட்சியைப் பெற்று பெருமகிழ்ச்சி கொண்டார். இது பெரிய புராணத்து வருவது. 'சற்றே விலகியிரும் பிள்ளாய்' – நந்தனார் சரித்திரக் கீர்த்தனத் துள்ளது. கோபாலகிருஷ்ண பாரதியாரது திரு நாளைப் போவார் புராணத்தை அடியொற்றிப் பாடப் பெற்றது.

சிவபெருமானைப் போல நந்திக்கும் நெற்றிக் கண்ணும், நாலு புயமும், நெருப்பு உருவமும், பிறைமுடியும், கையிற் பிரம்பும் உண்டு. சிவபெருமானின் அதே ரூபத்தைக் கொண்டிரு க்கும் பதவி சாரூபப் பதவி. இப்பதவி வாயிற் காவலர் பதவியாக மாத்திரம் அமையவில்லை. முன்னர் தருமதேவதையும், பின் விஷ்ணு மூர்த்தியும் வெள்ளை எருதாகச் சிவனைத் தாங்கி வகித்த பதவியும் நந்திகேஸ்வரருக்கு அமைந்தது. 'வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளயெருதேறி' நன்றுடையானை தீயதிலானை நரை வெள்ளேறு ஒன்றுடையானை', 'எருதேறி ஏழையுடைனே', உமையோடும் வெள்ளை விடைமேல்', 'விடையேறும் நங்கள் பரமன்', 'மால்விடைபாடி', 'விடைமேல் மாதோடு மகிழ்ந்து, நத்தார் படை ஞானன் பசுவேறி, எனத் தேவார திருவாசகங்களிலும், ஏறுர்ந் தானேறே எனத் திருமுருகாற்றுப் படையிலும் வருவன காண்க.

நந்தி சிவசன்னிதான வாயிற்காவலனாகவும், சிவனூரும் வாகனமாகவும் அமைந்ததன்றிக் கொடியாகவும் அமைந்துள்ளார். எது போல விநாயகருடைய வாகனம் மூஷிகம். மூஷிகம் – எலி. இது 'ஆகு' எனவும் படும். கொடி மூஷிகம்; விநாயகர் கோவில்களில் பலி பீடத்துக்கு முன் அமர்ந்து நிற்பதும் மூஷிகம். வீரபத்திரர்க்கும் சிவனுக்குரியது போன்றதே, வைரவர்க்கு இவை எல்லாமாகி அமைந்தது நாய். 'வேதமாகிய நாய்ப் பரி' என்னும் நூல்கள். முருகனைப் பொறுத் தமட்டிற் சிறு வித்தியாசம். முருக சன்னி தானத்து முருகன் வாகனமாகவும் அமைந்தது மயில். இது சூர மயில். சூரன் மயிலானவன். பதுமன் சேவற் கொடியானான். சூரபத்மனைப் பற்றிக் கந்தபுராணத்திற் காண்க. மயில் வாகனமாம் பதவியைச் சூரன் வகிக்கு முன் அப்பதவியை வகித்திருந்தவன் இந்திரன். இது இந்திர மயில். சூரபத்மன் – சூரபன்மன் – போர் நிகழ்ந்த போது, மயிலாம் பதவியை இந்திரன் வகிக்க வேண்டியவனானான். இதற்கு முன் இப்பதவியில் உற்றிருந்து பிரணவமெனும் ஓங்காரம்.

இனி விடயத்துக்கு வருவோம். விஷ்ணுவுக்கு மூன்றாகவும் உள்ளவர் கருடாழ்வார். பிரமனுக்குப் பரந்தளவிற் கோவில்கள் இல்லையாயினும், அவரின் ஊர்தியாகவும், கொடியாகவும் உள்ளது அன்னம். இப்படியே முக்கிய தேவர்களுக்குரிய ஊர்திகளும் கொடிகளும் கூறப்பட்டுள்ளன. புராணேதிகாசங் களில் இவை பற்றிக் காணலாம். மண்ணாளும் வேந்தர்க்குச் சிறப்புடையதாகக் கருதப்பட்டவை அவர்களின் கொடிகள். கொடிக்குத் தனிமதிப்பு. பாண்டியனுக்கு மீனக் கொடி. அவன் மீனவன் எனப்பட்டான். சோழனுக்குப் புலிக் கொடி. தமிழிலே தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் பற்றிப் பேசப்படுகின்றது. அவற்றுள் ஒன்று 'தசாங்க மாலை' என்பது. அவர்கட்குச் சிறப்பாக அமைந்துள்ள – அமைய வேண்டிய – அம்சங்கள் பத்து. அவற்றுள் ஒன்று கொடி. இவை ஒவ் வொன்று பற்றியும் ஒவ்வொரு செய்யுள் புலவர் சிறப்பித்துப் பாடிப் பத்துச் செய்யுள்களால் அமைப்பது தசாங்க மாலையாகும். மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் தந்துள்ள திருத் தசாங்கம் நன்கறிந்தவையே.

திருவாசகத்துத் திருத்தசாங்கத்திலே சிவனார் கொடி பற்றி இயம்ப வந்த

> கெடுவாக வையாது உலகம் நடுவாக
> நன்றிக்கண் தங்கியான் தாழ்வு .
>
> நடுவுநிலையாக அறநெறியில் வாழ்பவனது வறுமையை, உயர்ந்தோர் கேடாகக் கருத மாட்டார்.
> 117

மணிவாசகனார், கிளி ஒன்றை விளித்துக் கூறுவதாக அமைந்த பாடல் இது:-

சோலைப் பசுங்கிளியே! தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் - சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்கட்டும்
கோதிலா ஏறாங் கொடி.

சிவனார் கொடி "ஏறாங் கொடி" என்கிறார். ஏறாங்கொடி ஏற்றுக் கொடி "ஏற்றுயர் கொடியுடையாய்' என மணிவாசகரே தமது திருப்பள்ளியெழுச்சியில் மேலும் கூறுவார். இதற்கு ஆதாரமான மேற்கோள்கள் பல எமது சாத்திர நூல்களிலும் தோத்திர நூல்களிலும் புராணங்களிலும் தமிழிலக்கியங்களிலும் மலிந்து கிடக்கின்றன. விரிப்பிற் பெருகும். இடமின்மை முக்கிய தடை. அப்பாற் செல்வோம். ஏறாங்கொடி, ஏற்றுக் கொடி, இடபக் கொடி, இடபக் கொடி, நந்திக் கொடி, நந்திக் கொடி, சிவக் கொடி, சிவக் கொடி, அன்புக் கொடி. 'அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்' என்பர் திருமூலர். அன்பு வேறு அருள் வேறு அல்ல. ஆகவே, அருட்கொடி அம்மட்டோ! அறக்கொடி - தருக்கொடி. சிவத்தை அடையச் செய்யும் நெறி சிவநெறி சைவநெறி. ஆகவே நந்திக் கொடி சைவக் கொடி. சைவ நெறி என்பது தப்பு. 'மேன்மைகொள் சைவ நீதி' என்றார் ஆன்றோர். எனவே நந்திக் கொடி 'சைவநீதிக் கொடி' நந்திக் கொடியை உன்னும் போது நம்முள்ளத்தில் இனிப்பாவார் பல்லவர். ஏனையோர் மீனக் கொடியையும், புலிக் கொடியையும், விற் கொடியையும் கொள்ள, முதன் முதல் நந்திக் கொடியைத் தங்கொடியாக் கொண்டு, பட்டொளி வீசிப் பறந்தொளிரச் செய்த பெருமை பல்லவ மன்னவர்க்கே உரியது. அவர்தம் சைவப் பற்றுப் பகரொண்ணாதது. வந்தனைக்குரிய வையகமெங்குந் திகழச் செய்வது, நம்மவரெல்லோரதுங் தலையாய கடனாகும். இப் பணியிற் கொழும்புச் சைவ முன்னேற்றச் சங்கம் வகிக்கும் பங்களிப்பு மகத்தானது; முன் மாதிரியானது.

நந்திக் கொடியொளி நல்லுல கத்துள
எந்த வூரிலு மிலங்கித் திகழ்கவே.


## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

| தனிப்பிரதி | ஆண்டொன்றிற்கு |
|---|---|
| இலங்கையில் ரூபா 25.00 | ரூபா 250.00 |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுன் 10 அல்லது US$15.

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

C.NAVANEETHAKUMAR
42, JANAKI LANE,
COLOMBO - 04
SRI LANKA.


***The great will not regard as poverty the low estate of that man who dwells in the virtue of equity.***

சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர்

# உண்மை விளக்கம்

- மெய்கண்டார் அடியவன்

35, ஆம் திருப்பாடல் நடராச வழிபாடு பற்றியது.

**ஓங்காரமே நல் திருவாசி உற்று + அதனின்**
**நீங்கா எழுத்தே நிறைசுடராம்- ஆங்காரம்**
**அற்றார் அறிவர் அணி அம்பலத்தான் ஆடல்இது**
**பெற்றார் பிறப்பு + அற்றார் பின்**

திருவாசியை ஓங்காரரூபமாகவே தியானம் செய்தல் வேண்டும். அத்திருவாசிக்குள் விளங்கும் பூரணசோதியை அப்பிரணவத்துள் அடங்கிய எழுத்துக்களாக அறிதல் வேண்டும். இவ்வுண் மையை அகங்காரம் அற்ற சிவஞானிகளே அறிவர் மற்றையோர் அறியார். இது விளங்கியோர் பேரின் பத்திலே திளைப்பர். சனன மரணமற்றவர்களாவர்.

36, 37 ஆம் பாடல்கள் முறையே ஊன நடனம் ஞான நடனம் இரண்டையும் விளக்குகின்றன. இவற்றுள் பின்வரும் ஊனநடனம் பற்றிய திருப்பாடலே பிரசித்தம் பெற்றுள்ளது போல அதன் பின்னர் வரும் ஞான நடனத் திருப்பாடல் பிரசித்தம் பெறவில்லை என்பது பிரசித்தம்.

**பா. 36.**

**தோற்றம் துடியதனில், தோயுந்திதி அமைப்பில்;**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்; ஊற்றமா**
**ஊன்றும் மலர்பதத்தில் உற்றதிரோதம்; முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.**

(1) தோற்றம் - படைத்தல்; துடி - உடுக்கை ஏந்திய திருக்கை. (2) காத்தல் - திதி அமைந்த திருக்கரம் அதாவது வீசுதிருக்கையில் (3) மல சங்காரம் - அங்கியாகிய அக்கினி ஏந்திய திருக் கையில் (4) திரோதம் எனப்படும் மறைத்தல்; முயலகன் மீது ஊன்றும் திருவடியில் (5) முத்தி எனப்படும் அருளல் : எடுத்த மலர்பதத்தில். அழித்தல் என்பது ஒடுக்குவதேயாகும்.

இவ்வாறு ஊன நடம் செய்கின்ற இறைவன் ஞான நடம் செய்யும் வகை வருமாறு:

**பா. 37.**

**மாயைதனை உதறி, வல்வினையைச் சுட்டு; மலம்**
**சாயஅமுக்கி; அருள்தான் எடுத்து; - நேயத்தால்**
**ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்**
**தான்; எந்தை யார் பரதம் தான்.**

(1) மாயையை உதறல் (2) வல்வினையைச் சுடல் (3) மலம் சாய அமுக்கல் (4) அருள் எடுத்தல் (5) ஆனந்த வாரிதியில் ஆன்மாவை அழுத்தல் இவை முறையே 1. துடி ஏந்திய கை. 2. அக்கினி ஏந்திய கை. 3.ஊன்றும் திருவடி. 4. எடுத்த திருவடி 5. அமைத்த திருக்கையின் ஞான நடச் செயல்களாகும்.

ஊன நடனம் - நமசிவாய; ஞான நடனம் - சிவாயநம இவ்விரு திருப்பாடல்களுக்கும் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் எழுதிய உரை விளக்கம் பின்வருவனவாகும்:- "சி-சிவம், வ-திருவருள், ய-ஆன்மாக்கள், ந-மாயை, ம-ஆணவம் மலம். நிமித்த காரணன் ஆன சிவனே தன் சங்கற்பத்தினால் முதற்காரணமான மாயையில் நின்றும் காரிய பிரபஞ்சங்களைத் தோற்றுகின்றான். கர்த்தா சிவன், காரியப் பொருள்களை, அவன் உதறிப் படைக்க காரணப் பொருளாயிருப்பது மாயை மாயையிலிருந்து ஒலியுலகு, பொருளுலகு இரண்டும் படைக்கப்படும். துடி - உடுக்கை, ஓங்கார சப்த் தத்தையும், நாதத்துவத்தையும் அபர பர நாதத்தையும் குறித்து நிற்பது. சுத்த மாயையின் காரியம் ஒலியுலகம். சிவபிரான் ஆன்மாக்களை பாச சம்பந்தத்தால் உலக சுக துக்கங்களில் அழுத்து கின்றான். தம்மிடத்திலேயும் சுக துக்கம் ஊறச் செய்கின்றான். சிவ சம்பந்தத்தால் பேரின்ப நுகர்ச்சி அநுபவிக்கும் படி அதில் அழுத்துகின்றான். அபயம்

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

தான் சமமாக நின்று, பின் தன்னிடத்து வைத்த பொருளின் எடையை உள்ளவாறு காட்டும் தூலாக்கோல் போல, மனத்தில் சமநிலையாக இருந்து ஒரு பக்கஞ் சாயாது உண்மை உரைத்தல் சான்றோர்க்கு அழகாம்.
118

அளிக்கும் அவசியம் எது குறித்தது ? பாசம் சடம் அதற்குப் பயமும் இல்லை அபயமும் வேண்டா. பதிக்கும் பயம் உண்டாயின் அது பதி ஆகாது. அதனால் பயம் எய்துவன ஆன்மாக்களாகிய பசுக்களே ஆகும். ஆதலின் அபயம் அளிப்பது பதி. அபயம் பெறத்தக்கன பசுக்கள். பயம் விளைக்கவும் போக்கவும் கருவியாவன பாசம். அபயம் அளிக்கும் கருவி பதி ஞானம். அபயம் அடைவிக்கும் கருவி ஆன்ம சிற்சத்தி. கருவியாகிய பதி ஞானத்தால் உயிர்களுக்கு பாசத்தை சேர்க்கவோ நீக்கவோ வினை முதலாவது பதி. மாயா காரியங்களைப் பசுக்களின் நீக்கி மாயையாகிய காரணரூபமாக நுனுகச் செய்யாமல், பசுக்களிடத்தில் அவற்றின் வினைக்குத்தக நிறுத்துவதே காத்தல். அக் காத்தல் தொழில் பதியின் பொருட்டும் அன்று; பாசத்தின் பொருட்டும் அன்று; பசுக்களின் பொருட்டே ஆகும். பாசத்தோடு பசுக்களைப் பக்குவப்படும் அளவும் சேர்த்து வைத்து வருதலே காத்தல். பிரித்துவிடுதல் அழித்தல். சேர்த்து வைத்தலாகிய நிகழ்ச்சி பசுக்களிடத்திலும், பிரித்து வைத்தல் மாயையின் இடத்திலும் ஆதலின், காத்தல் யகரமாகிய அபயத்திருக்கையிலும் அழித்தல் நகரமாகிய தீ ஏந்திய திருக்கையிலும் ஆவன என்று அருள் நூல் உணர்ததுகின்றது."

38ம் திருப்பாடல் ஆனந்த நிலை எனப்படும் துரியாத்த நிலை பற்றியதாகும். 37ம் பாடல் அருள் நிலை எனப்படும் துரிய நிலை பற்றியதாகும்.

**பா. 38.**

**மோனந்த மாமுனிவர் மும்மலத்தை மோசித்துத்**
**தானந்த மானிடத்தே தங்கியிடும் - ஆனந்தம்**
**மொண்டருந்த நின்றாடல் காணும் அருள் மூர்த்தியாக்**
**கொண்டதிரு வம்பலத்தான் கூத்து**

மும்மலத்தையும் மோதித்து, தான் அந்தமான இடத்திலே தங்கியிடும் ஆனந்தத்தை மொண்டு, அருந்த நின்று, ஆடல் அருளுருவான் திருவம் பலத்தான் கூத்து என்று இத்திரு வெண்பாவில் உளது. 39 ம் திருப்பாடல் திருக்கூத்தை கண்டார் பெறும் பேறு எத்தகையது எனப் பின்வருமாறு கூறு கின்றது.

**பா. 39.**

**பரைஇடம்ஆ நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்**
**உரை உணர்வுக்கு எட்டா ஒருவன் - வரைமகள் தான்**
**காணும் படியே கருணை உருக்கொண்டு ஆடல்**
**பேணும் அவர்க்கு உண்டோ பிறப்பு.**

பரை - பராசத்தி(வ), இடம் ஆ நின்று - இடமாகக் கொண்டு நின்று; மிகுபஞ்சாக்கரத்தால் - சிகாரத்தால்(சி); உரை உணர்வுக்கு எட்டா ஒருவன்- மனவாசகங்கடந்தவனாகிய இறைவன்; வரைமகள் தான் காணும்படியே - சிவகாமி யம்மையார்காணுமாறு ; கருணை உருக் கொண்டு- இரங்கங் கொண்டு; ஆடல்- திருக்கூத்து; பேணும் அவர்க்கு - போற்றுவோர்க்கு; உண்டோ பிறப்பு - இனிப் பிறவி இல்லை. (பரை இடம் - பராசத்தியாகிய திருவம்பலமே இடம்.)

30 ம் பாடலிலே முதல்வன் திரு நடத்தின் இயல்பை மாணவர் கேட்க மெய்கண்டார் 31-39 திருப்பாடல்களின் விளக்கம் அளித்தார். 40 ஆம் திருப்பாடலில் பின்வருமாறு மாணவர் வேண்டு கோள் செய்கின்றார்.

திருக்கூத்து முறைமையை நன்றாய் அருள் செய்தீர், இனி பஞ்சாக்கரத்தின் இயல்பை உள்ளவாறு சொல்லியருளல் வேண்டும். ஏனைய எழுத்துக்கள் போல அழியுந் தன்மை பஞ்சாக் கரத்திற்கும் உண்டோ என்னும் ஐயத்தை நீக்கிய ருளுக.

**பா. 40.**

**நாதாந்த நாடகத்தை நன்றா அருள் செய்தீர்!**
**ஓதீர் எழுத்து ஐந்தும் உள்ளபடி - தீது அறவே**
**அஞ்செழுத்து ஈதுஆகில் அழியும் எழுத்து ஆய்விடுமோ?**
**தஞ்ச அருட்குருவே! சாற்று.**

மேற்கண்டவாறு மாணவர்கேட்டதற்குப் பின்வ ருமாறு 41 ஆம் பாடலில் அஞ்செழுத்தின் பொருளை முதற்கண் குரு உரைக்கின்றார்.

**பா. 41.**

**உற்றகுறி அழியும் ஒதுங்கால் பாடைகளில்**
**சற்றும் பொருள்தான் சலியாது - மற்று அது கேள்**
**ஈசன், அருள், ஆவி, எழில்ஆர் திரோதம் மலம்**
**ஆசுஇல் எழுத்து அஞ்சின் அடைவு ஆம்.**

*To incline to neither side, but to rest impartial as the even fixed scale is the ornament of the wise.* 118

உற்றகுறி அழியும் - எழுத்து அழிந்தாலும்; ஓதுங்கால் பாடைகளில் சற்றும் பொருள்தான் சலியாது - மொழிகளிலே வரும் எழுத்தின் பொருள் அழிய மாட்டாது. அவ்வாறே ஈசன்(சி), திருவருள்(வ) ஆவியாகிய உயிர்(ய), எழுச்சியுள்ள திரோதான சத்தி(ந), மலம்(ம), ஆகிய ஐந்தும் குற்றமற்ற அஞ் செழுத்தால் குறிக்கப்படும்.

42ஆம் திருவெண்பா திருவருளைப் பெறப் பஞ்சாக்கரத்தை எவ்வாறு உணர்தல் வேண்டும் எனப் பின்வருமாறு உரைக்கின்றது.

**பா. 42.**

**சிவன், அருள், ஆவி, திரோதம், மலம் ஐந்தும்**
**அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்- இவன் நின்று**
**நம்முதலா ஓதில் அருள்நாடாது நாடும் அருள்**
**சிம் முதலா ஓதுநீ சென்று.**

சிவன் - சி; அருள் - வ; ஆவி-ய; திரோதம் - ந; மலம் - ம. இது பஞ்சாக்கர அஞ்செழுத்தின் பொருள் முறையாகும். இவன் நின்று - பக்குவம் பெற்ற ஆன்மா நின்று; ந (ம) முதலாக ஓதின் - நமசிவாய என ஓதினால்; அருள் நாடாது - திருவருள் பொருந் தாது; சிவப்பேறு கிட்டாது; சி(ம்)முதலா ஓது- சிகாரம் முதலாக ஓதின் திருவருள் வெளிப்பட்டுத் தோன்றும். நீ இன்று அவ்வாறே ஓதுவாயாக. இதே கருத்துப் பின்வரும் திருமந்திரத்திலும் காணலாம்.

**நம என்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச்**
**சிவ என்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்றப்**
**பவம் அது தீரும், பரிசும் அதற்றால்**
**அவ மதி தீரும் அறும் பிறப்பு அன்றே.**

ஓதும் முறையைக் கூறி 43 ஆம் திருப்பாடலில் எய்தும் பயனைக் கூறுகின்றார்.

**பா. 43.**

**அண்ணல் முதலா அழகார் எழுத்து ஐந்தும்**
**எண்ணில் இராப்பகல் அற்று இன்பத்தே- நண்ணி**
**அருளானது சிவத்தே ஆக்கும் அணுவை**
**எனது இருளா னதுதீர இன்று.**

அண்ணல் முதலா அழகு ஆர் எழுத்து ஐந்தும் - சி முதலா அழகு நிறைந்த ஐந்தெழுத்தையும்; எண்ணில் - அறிவால் கணித்தால்; அருளானது நண்ணி - திருவருளானது(வ) பொருந்தி; அணுவை - ஆன்மாவை(ய); இன்று இருளானது தீர - இப்போதே மல இருள்(ம) நீங்கும்படி; இராப் பகல் அற்று - கேவல சகல நிலைகள் நீங்கும்படி; இன்பத்தே சிவத்தே ஆக்கும் - சுத்த நிலையிலே ஆனந்த உருவத்தையுடைய சிவத்தின்(சி) கண்ணே சேர்க்கும்.

முத்தி பஞ்சாக்கரத்தையே ஓதும்படி 44 ஆம் திருப்பாடல் கூறுகின்றது.

**பா. 42.**

**ஆதி மலம் இரண்டும் ஆதியா ஓதினால்**
**சேதியா மும்மலமும் தீர்வுஆகா - போதம்**
**மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி**
**விதிப்படி ஓது அஞ்செழுத்து மே.**

ஆதி மலம் இரண்டும் - நம என்னும் இரண் டெழுத்தின் பொருளாகிய மாயையும் ஆணவமும்; ஆதியா ஓதினால் - முன்னாகும்படி ஓதினால்; சேதியா மும்மலமும் - சேதமாகாத ஆணவம் மாயை கன்மம் ஆகிய மூன்று மலங்களும்; தீர்வாகா - நீங்கா; மாறி விதிப்படி ஓது அஞ்செழுத்தும் - சி வ முன்னாக அத்திருவெழுத்து ஐந்தையும் விதிப்படி உச்சரிக்க; போதம் மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் - ஆன்ம போதத்தால் மதித்தற்கரிய பேரின்பத்திலே வாழலாம்.

பஞ்சாக்கரச் சிறப்பினைப் பின்வரும் 45 ஆம் திருப்பாடல் சுருக்கமாகக் கூறுகின்றது.

**பா. 45.**

**அஞ்செழுத்தே ஆகமமும், அண்ணல் அருமறையும்**
**அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்- அஞ்செழுத்தே**
**ஆனந்த தாண்டவமும், ஆறு ஆறுக்கு அப்பால் ஆம்**
**மோனந்த மாமுத்தி யும்.**

வேதம், ஆகமம், புராணம், ஆனந்த நடனம், ஆறு ஆறு முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பாற்பட்ட தத்துவ அதீதமாகிய மௌனமாயிருக்கும் பர முத்தியும் பஞ்சாக்கரமே.

சொல்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.

சொல் கோணு தல் இல்லாதது (நேர்மையாகப் பேசுவது) நடுவு நிலைமையாம். மனம் ஒரு பக்கமாகச் சாயாமையை முழு உறுதியாகப் பெற்றால் (மட்டுமே அது இயல்வதாம்). (அதாவது சொல்லில் நேர்மைக்கு அடிப்படை, மன நேர்மை, அவை இரண்டும் உடைமையே நடுவுநிலைமை).

# மூவர் செய்பனுவல்

- முருகவேபரமநாதன்

பாகத்தி னால்கவிதை பாடிப் படிக்கவோ
பக்திநெறி இல்லை, வேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையும் இல்லை,
யோகத்தி லேசிறிது முயலஎன் றால்தேகம்
ஒவ்வாது, இவ்ஊன் வெறுத்தால்
உயிர்வெறுத் திடல்ஒக்கும், அல்லது கிரியைகள்
உபாயத் தினால் செய்யவோ
மோகத்தி லேசிறிதும் ஒழியஇலை, மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்க என்றால்
முற்றாது பரிபாக சக்திகள் அநேகம், நின்
மூதறிவி லேஎழுந்த
தாகத்தி லேவாய்க்கும் அமிர்தப்ர வாகமே!
தன்னந் தனிப் பெருமையே!
சர்வபரி பூரண அகண்டதத் துவம்ஆன
சச்சிதா னந்தசிவமே!

இப்பாடலிலே தாயுமான சுவாமிகள் 'மூவர் செய்பனுவல்' எனக்குறிப்பிட்டது தேவாரத்தை யேயாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரரே அம்மூவராகும். பனுவல் என்பது நூல் என்று பொருள்படும். சைவ சமயப் பக்திப் பனுவல்கள் வரிசையில் முதல் அமைந்ததே தேவாரம். இவை ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இதை மூவர் தமிழ் என அவ்வையார் போற்றி யுள்ளார். தமிழ் என்ற மொழி ஓர் ஊடகம். இம் மொழியில் எழுந்த பாடல்களின் தொகுப்பு திருமுறையென அழைக்கப்படும். ஆழ்வாராதியோரும், தேவார ஆசிரியர்களும் தமது அருளிச் செயல்களில், சிறப்பாகப் பதிகப் பயன் கூறும் போது அவற்றைத் தமிழ் என்றே குறிப்பிட்டுள்ளனர். திருவிசைப்பா ஆசிரியர் களும் இம்முறையைக் கையாண்டுள்ளனர். தேவாரம் என்னும் திருநாமம் அப்பர் சுவாமி களின் அருள்வாக்குகளையே குறிப்பிட்டன எனவும், சம்பந்தரது திருக்கடைக் காப்பு எனவும், சுந்தரரது திருப்பாட்டு என வழங்கப்பட்டதாயும் சொல்லப்படுகின்றது. இம்மூவரது பாடல்கள் தோத்திரங்களாய் அமைந்துள்ளன. கீர்த்தனமே தோத்திரம். இன்று சைவசமயிகள் மத்தியில் வெறும் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பஞ்ச புராண வரிசையைக் கடந்து தாயுமானார் போன்றோரின் பக்திப் பிரபந்தங்கள் உயர்ந்தன வாயினும், அவை ஓதும் மரபு இல்லை. திருப்புகழ் மட்டும் சில போது இடம் பெறுகின்றது. பஞ்சபுராணம் தவிர்ந்த எத்தனையோ நெஞ்சை யுருக்கும் பிரபந்தங்கள் தமிழிலே நிறைய உண்டு. அவை அவரவர் பக்குவத்துக்கு ஏற்பப் போற்றி ஓதப் படுகின்றன. எனினும், சம வேளையில் கூட்டு வழிபாடு என்னும் பஜனை, இப்போது "பஜன்" ஆய் விட்டமை கவனத்துக்குரியது. இவற்றிலே இறைவாக்காய் அமைந்த பாடல்கள் இடம் பெறுவதாய்க் காணப்படுவதில்லை. இதனாற் திருமுறைகள் ஓரங்கட்டப்படுவதே உண்மை. அதுமட்டுமன்றி, எது தேவாரம், எது திருவாசகம், எது திருவிசைப்பா, எது திருப்பல்லாண்டு, எது திருப்புராணம் என்று தெரியாமற் கலப்படம் செய்பவர்களும் நிறைய இருக்கிறார்கள். எழுந்தமானமாய்ப் பாடு பவர்களும், திரித்துப் பாடுபவர்களும், தம் சொந்த நோக்கைப் புகுத்திப் பாடுவோரும், பிழை படப் பாடுவோரும் மலிந்து காணப்படுகின்றனர். ஊடே அபிராமி அந்தாதி, அலங்காரம் என்பவற்றிலிருந்தும் பாடுகிறார்கள். இஷ்டப்படி ஆலய நிர்வாகமும், அய்யரும் கூட இது விஷயத்தில் ஏனோ, தானோ என்ற நிலைபபாடு தான். இது நம் சைவ சமயத்துக்கு ஏற்பட்ட தாக்கமும், இழிவுமாகும். இதையிட்டுச் சைவமும், மக்களும் கவனிக்க வேண்டிய

***Freedom from crooked speech is rectitude if it be accompanied by steady freedom from crookedness within.***

காலகட்டம் இது எனலாம். திருமுறை என்பது தெய்வத்தன்மையுடைய நூல் என்றே பொருள்படும். எனவே நாமதைப் பேணிப் போற்ற வேண்டும். வெளிநாட்டு ஆலயம் பஞ்ச புராணத்துக்கு மதிப்புக் கொடாவிடின், எதிர்காலச் சைவப் பண்பாட்டியல் என்ன ஆகும்? சைவ நிலையங்கள், சங்கங்கள், இயக்கங்கள், தாபனங்கள், தேவஸ்தானங்கள், சமய வெளி யீடுகள், மாத, வருட இதழ்கள், கும்பாபிஷேக மலர்கள் சைவசமய ஊடகங்கள், தொலைத் தொடர்புச் சாதனங்களின் செயற்றிறன்கள் சைவசமய பண்பாட்டியலின் ஒரு அங்கமான திருமுறைகளைப் பேணுவதில் சைவத்தின் மீது அக்கறையும், சிரத்தையும் கொள்ள வேண்டும். அவசரமான உலகிலே நாம் நம் சமய வாழ்வில் கூடிய ஈடுபாடு உள்ளவர்களாக இயங்க வேண்டிய காலகட்டம் இது.

தேவார திருவாசகங்கள் நிறைமொழியாளரின் மந்திரங்கள், வேதசாரங்கள் எல்லாமே இறைவன் வாக்கால், இறைவன் வாக்காய் அமைந்தவை என்பதற்கு அவர்களின் அருளவாக்குகளே அகச்சான்றாகும். இவ்வருளாளர்களே பதிகம்தோறு ம் அதை விண்டுரைத்துள்ளனர். எனதுரை தனதுரையாக எனச் சீர்காழிச் செல்வர் பேசுகிறார். அப்பர் பெருமானும் பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் பாமாலை பயில்வித்தானை என்று தன் பாடல்களிலே தெளிவுபடுத்தியுள்ளார். சுந்தரரைச் சொற்றமிழ் பாடு எனக் கட்டளை இட்டு அடியெடுத்துக் கொடுத்தவனும் சிவனே. அவன் தென்னா டுடைய சிவன். எந்நாட்டவர்க்கும் இறைவன். நம் ஆலயங்களிலே பிறதெய்வ வழிபாடு புகுவதையும், அற்புதங்கள் செய்பவர்களை ஆராதனை செய்வதும் புகுத்தப்பட்டுச் சைவம் நெறி பிறழக் காண்கின்றோம். இந் நிலைப்பாட்டைச் சைவ உலகம் பார்த்து வாழாதிருத்தல் நலமா?

எது தேவாரம் என்று அறியாதவர், பத்திரிகைகளிலே பிழையாகவும் எழுதுகின்றனர். சமய அறிவில்லாதவர்கள், இளம் சந்ததியினர், ஆங்கில மோகம் உள்ளவர்கள் - பிழையான பதிப்புகளை நம்பி விடுவர். எனவே, நுண்மான் நுழைபுலமும், திருமுறையனுபவமும், சமய நூலறிவும் குறைந்தவர்கள் இப்படி எழுதுவதும் சமயத்துக்குச் செய்யும் குந்தகமாகும்.

தேவாரங்களைப் போலவே மணிவாசகரின் திருவாசகத்தையும் மாற்றி விநாயகர் தோத்திரப் பாடலாக எழுதப்பட்டுள்ளது. இப்படியான செயற்பாடுகள் சைவத்துக்கு ஈனம் விளைவிப்பனவாம்.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய *ஆனைமுகனே*
சிறைபெறா நீர்போல் சிந்தை வாய்ப்பாயும்
*உமாமகேசுவரனின் மூத்த முதல்வனே*
இறைவனே! நீ என் உடலிடங் கொண்டாய்
*என்தாய் காட்டி வைத்த சித்த விநாயகரே*

இவ்வாறு திருவாசகத்தைத் திருத்தியது மன்றி அதைத் தேவாரம் என்று குறிப்பிடுவதும் மகா தப்பிதமாம். சமயநெறி மேம்பாட்டைக் கட்டிக் காக்க வேண்டிய தொலைத் தொடர்புச் சாதனங்கள் - சைவநீதியைப் பேணிப் பாதுகாக்கவும் வேண்டுமன்றோ!

முறை எனின் ஒழுங்கு முறைப்படுத்தல், வரிசைப்படுத்தல், நீதி என்று எல்லாம் பொருள். விழுமியமிக்க திருமுறைகளை இழிக்கும் இம்முறைகேடு சைவ சமயத்தின்று முழுக்கக் களையப்பட வேண்டும். எதிர்கால நாற்றங் கால்களில் நன்மையை மனதிற் கொண்டு.

செம் பொருள் காண்ப தறிவு
நுண்பொருள் காண்பதறிவு
மெய்ப் பொருள் காண்ப தறிவு

திருக்குறள்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின்.

பிறர் பொருளையும் தம் பொருள்போல் பேணிச் செய்தால் அதுவே வணிகர்க்கு உரிய நல்ல வாணிக முறையாம். 120

# திருவாசகத்தில் ஓர் ஆற்றுப்படை

– மட்டுவில் ஆ. நடராசா

'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை' என்று பாடினான் பாரதி. 'அச்சமென்பது மடமையடா' என்று பாடினார் இன்னொருவர்.

அரசியலில் இறைமாட்சி என்னும் அதி காரத்தில்

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு'

என்று வள்ளுவர் கூறுகின்றார்.

எஞ்சாமை – இடையறாது நிலைத்திருத்தல்.

இவ்வாறு அஞ்சாமை பற்றிக் கூறிய வள்ளுவர், அதற்கோர் புறநடைபோல 'அறிவுடைமை என்னும் அதிகாரத்தில்,

"அஞ்சுவ தஞ்சாமை பேதமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்"

என்று கூறுகின்றார்.

அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சாதிருப்பது மடமை. அஞ்சவேண்டியதற்கு அஞ்சுதல் அறிவார் தொழில் என்பது இதன் பொருள்.

உடலோடு இரண்டறக் கலந்து நிற்கும் உயிர் 'இந்த உடலே நான்' என்று கருதும் நிலையில் தனக்குந் தன் உடைமைகளுக்கும் வருந்தீங்கு கண்டஞ்சும். நான் இந்த உடலல்ல என்றுணர்ந்த பின், உயிர் உடலுக்கு வருந் தீங்கு கண்டஞ்சாது. உடைமைகள் தனதல்ல என்றுணர்ந்த பின் உயிர் அதுவரை தனதெனக் கருதிய உடைமைகளுக்கு வருந் தீங்கு கண்டுமஞ்சாது.

உயிர்சார்ந்ததன் வண்ணமாயிருப்பது. அது உடலைச் சார்ந்து உடலாயும், சிவத்தைச் சார்ந்து சிவமாயுமிருக்கும். சிவத்தைப் பற்றி நிற்கும் போது உயிருக்கு உடற்பற்று அற்றுப் போகும். உடலைச் சார்ந்து நின்று உலகப் பொருட்களை அனுபவிக்கும் உயிர் சிவத்தைச் சார்ந்து நிற்கும் போது சிவானந்தத்தை அனுபவிக்கும்.

சமணர்கள் அப்பரைத் திருநீற்றறையில் அடைந்த போதோ, கல்லோடு கட்டிக் கடலிற் போட்ட போதோ, அவருக்கு நஞ்சூட்டிய போதோ அவர் அச்சங் கொள்ளவில்லை. அவரைக் கொல்லும் பொருட்டுச் சமணர்கள் ஏவிய மதயானை அவரை நோக்கிச் சென்ற போதும் உள்ளத்தாற் சிவனையே பற்றி நின்ற காரணத்தால் அப்பர் அதைக் கண்டு அஞ்சவில்லை.

அப்பர் சிவனை உறுதியாகப் பற்றி நின்றது போல, அவர் காலத்திலிருந்த சைவ சமயிகளிற் பலரும் சிவனை உறுதியாகப் பற்றி நிற்கா விட்டாலும் சிவனையே வழிபட்டனர். மிகச் சிலர் மாத்திரம் சிவனை வழிபட்டதோடு சிறு தெய்வங்களையும் வழிபட்டிருக்கலாம். சைவ சமயிகள் சிறு தெய்வங்களை வழிபடக் கூடாதென்பது நான்கு நாயன்மார்களினதும் கருத்து. சிவனை மாத்திரம் வணங்குவதே சைவ சமயிகளுக்குச் சிறப்பு. "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம்" என்று அப்பர் மறுமாற்றத் திருத்தாண்டகத்திற் கூறுவது இக்கருத்துப் பற்றியேயாகும்.

அப்பர் காலத்தில் இருந்தது போலன்றி, மாணிக்கவாசக சுவாமிகளின் காலத்தில் சிறு தெய்வங்களை வழிபடுவோர் தொகை அதி

*The true merchandize of merhants is to guard and do by the things of others as they do by their own.*

கரித்தது போலத் தோன்றுகின்றது. அந்நிலை கண்டு மாணிக்கவாசக சுவாமிகள் வருந்தினார். அதனால் அவர், "அஞ்சுவ தஞ்சாமை பேதமை" எனவும், அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்" எனவும் வள்ளுவர் கூறியதை வழிமொழிய வேண்டியவரானார். இது காரணமாகவே அவர் அச்சப் பத்தைப் பாடினார் எனக் கருதலாம். அச்சப்பத்தில் அவர் இவற்றுக்கஞ்சேன் என்றும், இவருக்கு அஞ்சுவேனென்றும் கூறியிருக்கிறார்.

புற்றில் வாழ் அரவம் வன்புலால் வேலும் பிணிகளும் ஒளி வீசும் நெருப்பும் புரண்டு விழும் மலையும் கட்டுத்தறியை முரிக்கும் களிறும் அனல் கக்குங் கண்களையுடைய புலியும் முகிற் கூட்டங்களிற் தோன்றுகின்ற இடியும் கூரிய அம்பும் கூற்றுவனது சீற்றமும் ஒருவருக்கு மரணத்தை விளைவிக்கக் கூடியவை.

மரணம் என்பது உயிர் உடலை விட்டு நீங்குதல். உடற் பற்றுடையோருக்கு, தாம் பற்று வைத்திருந்த உடலை விட்டுப் பிரிவது வருத்தத்தைக் கொடுக்கும். உடற் பற்றற்றோர் அதை விட்டுப் பிரிவது காரணமாக வருத்த முறார்.

உடற் பற்றற்றவ ராதலால் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு மரணம் பற்றியோ மரணத்தை விளைவிக்கக் கூடியவை பற்றியோ அச்சம் ஏற்படக் காரணமில்லை. அதனால் அவர் மேலே கூறப்பட்டவற்றில் எதற்குந் தான் அஞ்சப் போவதில்லை யென்று கூறினார்.

அரசன் ஒருவன் அவன் செங்கோலாயினும் தனக்குறு துணையாயிருக்கும் அமைச்சரையும் நம்பாமல்அவனையும் ஒற்றர் மூலம் ஆராய்ந் தறிவான். அதனால் அவன் வஞ்சகனே யாவன்.

சொல்லுதல் யார்க்கும் எளிது. அறங் கூறுவது சுலபம். கூறியபடி செய்வது கடினம். சொன்ன சொல்லின்படி நடக்காதவர் பொய்யர். நெற்றி நிறைய நீறணிந்து சிவநெறியைப் புகழ்ந்து பேசுபவனேயானாலும் அந்நெறியில் நில்லா னாயின் அவன் பொய்யன். மதுவருந்தக் கூடாது, களவெடுக்கக் கூடாது என்று போதனை செய்யும் ஒருவன் கண்டவரில்லெனக் கருதிக் கட்குடித்தும் களவெடுத்தும் வருவா னேயானால் அவன் பொய்யன். அவனது போதனை சரியானது செயற்பிழையானது. இத்தகைய வஞ்ச நெஞ்சக் கள்வரோடு உறவு கொள்வது தவறு. இதைக் குறிப்பிடுவதற்காகவே மாணிக்கவாசக சுவாமிகள் பொய்யர்தம் மெய்யுமஞ்சேன் எனவும் மன்னரோருறவு மஞ்சேன் எனவுங் கூறினார்.

பிறர் கூறும் பொருந்தாப் பழிச் சொற்களும் வேட்கையும் வளைக் கையார் கடைக்கண் நோக்கும் அவர்களுடைய கிளிமொழியும் மயக்கவல்ல புன்முறுவலும் ஒருவனது கருத் தையும் பொறிபுலன்களையும் நிலை பிறழச் செய்யக் கூடியவை. புலன் வழிச் செல்லுதலன்றி அவற்றை நன்னெறியிற் செலுத்தும் ஆற்ற லுடைமையால் மாணிக்கவாசக சுவாமிகள் இவற்றுக்கு அஞ்சேன் என்று கூறினார்.

வினை காரணமாகப் பிறப் பிறப்புக்கள் உண்டாகின்றன பிறந்தவர் இறப்பது உறுதி யாதலால் இறப்பதற்கு கஞ்சாதவர் பிறப்பதற்கு மஞ்சார். அதனால், வினைக்கடல் கொளினு மஞ்சேன், பிறப்பினோ டிறப்பு மஞ்சேன், என்றும் கூறினார் மாணிக்கவாசக சுவாமிகள். இந்த அஞ்சா நெஞ்ரை அஞ்சச் செய்வனவும் உண்டு.

மற்றுமோர் தெய்வந்தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற் கற்றிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன், மற்று மோர் தேவரெத் தேவரென்ன அருவராதவரைக் கண்டால் அஞ்சுவேன், என்பொலா மணியை ஏத்தி இனிதருள்பருகமாட்டா அன்பிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன், இருநிலம் பிளந்து சென்று திருமாலுங் காணமாட்டாச் சேவடி பரவி வெண் ணீறணிகிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன். என் அப்பனுடைய பாதத் தாமரைகளை நினைத்துப் போற்றிப் புகழ்ந்து பூத்தூர்வி வணங்காதவர்களைக் கண்டால் அஞ்சுவேன். முன்னவன் பாதமேத்தி நெஞ்சு நெக்குருவாத வரைக் கண்டால் அஞ்சுவேன். விண்ணவர் நண்ணமாட்டாச் செறிதரு கழல்களேந்திச் சிறந்தினி திருக்கமாட்டா அறிவிலாதவரைக் கண்டால் அஞ்சுவேன். நீணிலா அணியினானை நினைந்து நைந்துருகி நெக்குக் கண்கள் நீர்சோர வாழ்த்தி நின்று ஏத்தமாட்டாதவரைக் கண்டால் அஞ்சுவேன். என்று அச்சப் பத்திற் கூறியி ருக்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

சிவவேடந் தாங்கி நின்று பிற தெய்வங்களை வணங்குவோர், சிவனை வணங்காதோர், அவனை நினைந்து நெஞ்சம் நெக்கு நெக்கு ருகாதோர் வஞ்சனையுடையோராவர். வெளிப்படையான பகைவரிலும் பார்க்க வஞ்ச நெஞ்சுடைய வேடதாரிகள் கொடியவராதலால், மேலே கூறப்பட்ட வஞ்சகருக் கஞ்சுவேன் என்று கூறினார் மாணிக்கவாசக சுவாமிகள்.

இவ்வாறு கூறியது மாத்திரமன்றி, தெய்வமென்ப தோர் சித்தமுண்டாகி, சிவனை அடையக் கருதுதலும் ஆறு கோடி மாயா சக்திகள் வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின எனவும் சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைய, 'கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும் படியேயாகி, மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது, அன்பெனும் ஆறு கரைபுரள, நாடோறுங் குறைவின்றி அன்பு செய்யும் அடியவர்களுக்குத் தாயாகி, அவர்களைச் சிவபெருமான் வளர்த்தெடுப்பான் என்று போற்றித் திருவகவலிற் கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

பலரைக் கூடி வாழும் பெண்ணொருத்தி அவர்களில் ஒருவரைத் தன் கணவனெனக் கூறுவது நகைப்புக் கிடமாவது போல, சிறு தெய்வங்கள் பலவற்றை வணங்குவோர் தம்மைச் சைவசமயிகள் எனக் கூறுவதும் நகைப்புக் கிடமானதாகும். பலரைக் கூடி வாழும் பெண் யாரைக் கணவனெனக் கூறுகின்றாளோ அவன் அவள் மீது அன்பு செலுத்தமாட்டான். அதுபோலவே பல தெயவங்களை வழிபடுவோருக்குச் சிவன் பேரருள் புரியமாட்டான். "மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது...... சாயா அன்பினை நாடோறும் தழைப்பவர், தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்னுந் திருவாசகத் தேன்துளிகள் இக்கருத்தையே புலப்படுத்துகின்றன. இவ்வாறு கூறுவதன் மூலம் சிவனை மாத்திரம் வழிபட வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது திருவாசகம்.

தேனுண்ணும் வண்டு மலர்கள் தோறுஞ் சென்று சிறிது சிறிதாகத் தேனெடுத்து அதனைச் சேர்த்து வைக்கின்றது. அதனால் அதற்குக் கிடைக்குமின்பம் நிலையானதல்ல.

அந்தத் தேனீயைப் போல, சைவசமயிகளிற் பலர் வேறு வேறு மத வழிபாட்டுத் தலங்கள் தோறுஞ் சென்று வழிபடுகின்றார்கள். சிலரைச் சாமிகளாகப் பிரகடனப்படுத்தி அவர்களை வணங்குகின்றார்கள். அதனால் அவர்கள் பெறும் பேறேதுமில்லை. காகம் இருக்கப் பனம்பழம் விழுவது போல அவர்களுக்குச் சிறு சலுகை ஏதாவது கிடைத்தாலும் அது நிலையானதல்ல. அதனாற் பெறுமின்பம் சிற்றின்பமேயாகும். பிறந்திறந்த வரலாற்றையுடைய சிறு தெய்வங்களாலோ, சாமியெனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர்களாலோ தம்மை வழிபடுவோருக்கு நிலையான பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்க முடியாது. பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானால் மாத்திரமே தம்மை வழிபடுவோருக்குப் பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்க முடியும். அதனாற் சிவனையே வணங்க வேண்டும்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியுங்
குனிப் புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ "
என்கின்றது திருவாசகம்.

அறிதற் கரியனாகிய சிவபெருமானுடைய அருட்சிறப்பையும் அவன், வன்நெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாது தன்னை ஆட்கொண்ட அருமைப்பாட்டையும் அரசவண்டுக்கு எடுத்துக் கூறி, அதைச் சிவபெருமானிடம் ஆற்றுப்படுத்துவது போல, இருபது பாடல்களைக் கொண்ட திருக்கோத்தும்பி மூலம், சிவனை மாத்திரமே வழிபட வேண்டுமென எமக்கு அறிவுரை கூறுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

"அத்தேவர் தேவர் அவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய பாடலின் பொருளை உணர வேண்டியது

இக்காலத்தின் முக்கிய தேவையாகும். பத்து - பற்று.

"சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்"

என மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதும்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று வள்ளுவர் கூறுவதும் ஒவ்வொருவரும் தாம் கல்விகேள்விகளாற் பெற்ற அறிவைச் செயற்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துவதற்கேயாம்.

திருவாசகத்தைப் படிப்போரும் ஆலயங்கள் தோறும் திருவாசக முற்றோதலை ஒழுங்கு செய்வோரும் கற்றாங் கொழுகத் திருவருள் துணை நிற்பதாக.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| பங்குனி | 01 | 14.03.2001 | புதன் | மாதப்பிறப்பு<br>காரடையாநேன்பு |
| | 07 | 20.03.2001 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| | 09 | 22.03.2001 | வியாழன் | பிரதோஷவிரதம் |
| | 10 | 23.03.2001 | வெள்ளி | தண்டியடிகள் குருபூசை |
| | 11 | 24.03.2001 | சனி | அமாவாசை விரதம் |
| | 15 | 28.03.2001 | புதன் | சதுர்த்தி விரதம்,<br>செல்லப்பா சுவாமிகள் குருபூசை |
| | 16 | 29.03.2001 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| | 17 | 30.03.2001 | வெள்ளி | ஷஷ்டி விரதம்,<br>நேசர் குருபூசை |
| | 19 | 01.04.2001 | ஞாயிறு | கணநாதர் குருபூசை |
| | 20 | 02.04.2001 | திங்கள் | ஸ்ரீராம நவமி, |
| | 21 | 03.04.2001 | செவ்வாய் | முனையடுவார் குருபூசை |
| | 22 | 04.04.2001 | புதன் | ஏகாதசி விரதம்,<br>யோகர்சுவாமி குருபூசை |
| | 23 | 05.04.2001 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 24 | 06.04.2001 | வெள்ளி | பங்குனி உத்தரம் |
| | 25 | 07.04.2001 | சனி | பூரணை விரதம் |
| | 27 | 09.04.2001 | திங்கள் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| | 29 | 11.04.2001 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 31 | 13.04.2001 | வெள்ளி | விஷு புண்ணிய காலம் மாலை<br>5.57 முதல் இரவு 1.57 வரை |

# சைவ நெறிப்பாடமும் பயிற்சியும்

## ஞானம்

சாந்தையூரான்

### பாடப்பொழிப்பு

**சிவாகமங்கள் கூறும் வழிபாட்டுமுறை**

| சரியை | கிரியை | ஞானம் |
| --- | --- | --- |
| இறைவனது உருவத்திரு மேனியை (தூலவடிவத்தை) வழி படுவதாகும் | இறைவனது அருவுருவத் திருமே னியை (சூக்கும வடிவத்தை) வழிபடுவதாகும | சச்சிதானந்த நிலையில்ஞான சொரூபியாக பரம்பொருளை வழிபடுவதாகும் |

**யோகம்**

இறைவனது அருவுருவத்திருமேனியை (அதிசூக்கும வடிவத்தை) வழிபடுவதாகும்

**சிவபெருமான் திருமேனி**

உருவம் — அருவுருவம் — அருவம்

இறைவன் திருமேனியை காண உயர்ந்த நிலையில் பக்குவ நிலையை அடைபவர் சச்சிதானந்த நிலையில் உள்ள பரம்பொருளை உணர முடியும். இத்தகைய உன்னத நிலையில் இறைவனை வழிபடுதல் ஞான பாதம் எனப்படும்

**ஞான பாதம்**

சைவ நாற்பாதங்களுள் மிக உயர்ந்ததாகும்

**ஞான வழிபாடு**

| ஞானத்திற் சரியை | ஞானத்திற் கிரியை | ஞானத்தில் யோகம் | ஞானத்தில் ஞானம் |
| --- | --- | --- | --- |
| ஞான நூல் களைக் கேட்டல் | கேட்ட விடயம் பற்றி சிந்தித்தல் | சிந்தித்த விடயத்தில் தெளிதல் | நிட்டை கூடல் |

**நிட்டை கூடல் தெளிந்த பின்**

அறிபவன் — அறிவு — அறியப்படுபொருள்

சிவத்துடன் கலந்து நிற்கும்

↓

ஞான மார்க்கத்தில் அசாதனை செய்பவர்

↓

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்னும் படிமுறையில் நன்கு செயல்கிலும் ஈடுபட வேண்டும் என சிவஞான சித்தியார் என்னும் சைவசித்தாந்த நூல் எடுத்துரைக்கின்றது

↓

**ஞான மார்க்கத்தில் நிற்க**

அஞ்ஞானம் அகல வேண்டும் ♣ பொய்யறிவு நீங்க வேண்டும் ♣ பாசப்பிணைப்பு இல்லாமற் போக வேண்டும் உலக வாழ்க்கை மீதுள்ளபற்று நீங்க வேண்டும். ♣ சிவத்தையன்றி பிறிதொன்றை எண்ணாது இருத்தல் வேண்டும்

பரிபக்குவ நிலை பெற்றோர்க்கே சிவத்துடன் கலந்து பேரானந்த நிலை ஏற்படும்

↓

**ஞானம் கைகூட**

சற்குரு இன்றியமையாதது

↓

"பரிபக்குவ நிலை அடைந்தால் சிவனே குரு வடிவாய் வந்து தீட்சை கொடுத்து முத்தியருளுவார்" எனக் கூறுகிறது மெய்ந்நூல்

↓

குருவை தரிசித்தல், பூசித்தல், நினைத்தல், தொடுதல், அவர் புகழ்பாடல், திருவடி சூடுதல் ஆகிய குருபக்தி செய்யும் முறையே சன்மார்க்கம் ஆகும் எனத்திருமந்திரம் கூறும்.

## செயற்பாடு

**I கீழ்க்காணும் வினாக்கறுக்கு விடை தருக.**

1. சிவாகமங்கள் உணர்த்துவது யாது?

..................................................................

2. சரியை முறை வழிபாடு யாது?

..................................................................

3. கிரியை முறை வழிபாடு யாது?

..................................................................

4. யோகம் முறை வழிபாடு யாது?

..................................................................

5. ஞானம் முறை வழிபாடு யாது?

..................................................................

6. ஞான பாதம் என்பது யாது?

..................................................................

7. ஞான மார்க்கத்தில் சாதனை புரிபவர் யார்?

..................................................................

8. ஞான மார்க்கத்தில் நிற்க யாது செய்ய வேண்டும்?

..................................................................

9. பரிபக்குவ நிலை என்பது யாது?

..................................................................

10. ஞானம் கைகூட யாருடைய அருள் இன்றிய மையாதது?

..................................................................

## விடைகள்

1. சரியை, கிரியை, யோகம், ஞானம்
2. இறைவனது உருவத்திருமேனியை வழி படுவதாகும்.
3. இறைவனது அருவுருவத்திருமேனியை வழி படுவதாகும்.
4. இறைவனது அருவத்திருமேனியை வழி படுவதாகும்.
5. சச்சிதானந்த நிலையில் ஞானசொரூபியாக பரம் பொருளை வழிபடுவதாகும்.
6. சைவ நாற்பாதங்களுள் மிக உயர்ந்தது.
7. கேட்டல், சிந்தித்தல், நிட்டை கூடல் என்னும் படிமுறையில் நன்கு செயல்களிலும் ஈடுபட வேண்டும்.
8. அஞ்ஞானம் அகல வேண்டும்.
   பொய்யறிவு நீங்க வேண்டும்.
   பாசப்பிணைப்பு இல்லாமற் போக வேண்டும்
   உலக வாழ்க்கை மீதுள்ளபற்று நீங்க வேண்டும்
   சிவத்தையன்றி பிரிதொன்றை எண்ணாது இருத்தல் வேண்டும்
9. சிவத்துடன் கலந்த பேரானந்த நிலை
10. சற்குரு இன்றியமையாதது.


### பயன் கருதாது அறம் செய்க

நன்றி ஒருவற்கு செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

நின்று ~ நிலைபெற்று, தளரா ~ சோராமல், வளர்தெங்கு ~ வளர்கின்ற தென்னை மரமானது, தான் உண்ட நீரை ~ தன் வேரால் உண்ட நீரை, தலையாலே ~ தன் முடியாலே, தான் தருதலால் ~ தான் (இளநீராக்கித்) தருதலால், (அதுபோல) ஒருவற்கு ~ (நற்குணமடைய) ஒருவற்கு, நன்றி செய்தக்கால் ~ உதவி செய்தால், அந்நன்றி ~ அவ்வுதவியை, என்று தருங்கொல் ~ அவன் எப்பொழுது திருப்பிச் செய்வானோ (அல்லது மாட்டானோ), என வேண்டா என்று ஐயுற வேண்டுவதில்லை.

(கரு) நற்குணமுடையவனுக்கு உதவி செய்தால் அது வீணாகாது. அவனும் நன்றியுடன் உதவியை விரைந்து நமக்குத் திரும்பச் செய்வான்.

உ




# POOBALASINGHAM BOOK DEPOT

**Book - Sellers, Stationers, News Agents, Publishers, Importers & Exporters**

TRUST COMPLEX, 340, SEA STREET, COLOMBO 11.
TEL: 422321

309-2/3, GALLE ROAD, COLOMBO 6.

4, BUS STAND, JAFFNA.

கோவில் அபிஷேகம், பூசை, திருமணம், புதுமனை புகுதல் போன்ற
விஷேச வைபகவங்களுக்கு தேவையான வாசனைத் திரவியங்கள்,
விபூதி, சந்தனம், குங்குமம், புநுகு, ஜவ்வாது, குங்குமப்பூ, கஸ்தூரி,
போன்றவைகளும், மின்சார மருந்து, குழந்தைகளுக்கு தேவையான
கோரோசனை, முக்கூட்டு மாத்திரை போன்றவைகளுக்கும், இந்தியத்
தயாரிப்புகளான அஸ்வினி, அமலா போன்ற கூந்தல் தைலங்கள்
கோவில் பட்டுக்குடை போன்ற அனைத்தையும்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஸ்தாபனம்



**S. SUBRAMANIAM & CO. (PVT) LTD.**

160, Sea Street, Colombo-11.
Tel : 435825, 458406



**Regd. No. QD/19/News** 2001 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் இல. 195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு 13, லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 20-02-2001 இல் வெளியிடப்பட்டது.